பக்கங்கள்:-22

# காலை முரசு

| முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | ஐப்பசி 30 | ஞாயிற்றுக்கிழமை | 16.11.2025 | அதிர்வு 108 |
|---|---|---|---|---|---|

## தோற்கடிக்க முடியாத தலைவரே பிரபாகரன்

### தொல். திருமாவளவன் புகழாரம்



(எஸ்.நிதர்ஷன்)

"தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் போர் உத்திகளை உலக 06



# 'சமஷ்டி' தீர்வைக் கோரி தமிழகத்தை நாடுகின்றது தமிழ்த் தேசியப் பேரவை

## தொல். திருமாவளவனுடனான சந்திப்பின் பின்னர் கஜேந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

தமிழகத்தில் உள்ள அனைத்து தரப்புகளையும் தமிழ்த் தேசியப் பேரவை அணுகத் திட்டமிட்டுள்ளது என்று தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ்த் தேசம், இறைமையுடனான சமஷ்டியைக் கோர தமிழகத்தின் அனைத்து தரப்பினரும் வலியுறுத்தும் நடவடிக்கையின் ஒரு கட்டமாக தொல். திருமாவளவனுடனான சந்திப்பு அமைந்தது என்றும் குறிப்பிட்டார். 07



# இந்தியாவுடனான பாலம் தேவையற்றது இலங்கை தனித்து இருப்பதே நல்லதாம்

## இப்படிச் சொல்கின்றார் அமைச்சர் சந்திரசேகர்

இராமேஸ்வரம் – தலைமன்னார் தரைவழிப் பாதை எனும் எண்ணக்கரு தற்போதைக்குத் தேவையில்லை என்று அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

இலங்கை தீவாக தனித்து இருப்பதே எல்லாவற்றுக்கும் நன்மையாக அமையும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பு தனியார் வானொலியொன்றின் அரசியல் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அவர் இதனைக் கூறினார்.

எனவே, 07






அரசாங்கம் மன்னார் தீவில் அமைப்பதற்கு இடம் அளித்துள்ள 14 காற்றாலைகளையும் முழுமையாக அங்கிருந்து அகற்றும் வரை தங்கள் போராட்டம் ஓயாது என்று அறிவித்த போராட்ட தரப்பு நேற்று போராட்டத்தை மூடி கட்டி அங்கிருந்து புறப்பட்டு விட்டது.

யாழ்ப்பாணத்து யோகர் சுவாமியின் நான்கு மகா வாக்கியங்களில் ஒன்று 'எப்ப்வோ முடிந்த காரியம்'.

அது போலவே மன்னார் போராட்டம் இவ்வாறு முடிவுக்கு வரும் என்பதும் 'எப்போவோ முடிந்த காரியம்' என்று முன்னரே அடித்துக் கூறக் கூடியதாக இருந்தது.

இந்தப் போராட்டத்திற்கு பிள்ளையார் சுழி போட்டு (ஆயர் பற்றிய விடயம் என்பதால் இந்தச் சொல்லாடல் தவறோ?) ஆரம்பித்து வைத்தவர் மன்னார் ஆயர்தான்.

14 காற்றாலைகளையும் அமைக்கும் முடிவை அரசு வாபஸ் பெறும்வரை போராட்டம் தொடரும் என்று அதிரடியாக அறிவித்து அதை 06




# தற்போது நட்டத்தில் இயங்குகின்றது பலாலி சர்வதேச விமான நிலையம்

**பருத்தித்துறை துறைமுகத்தை சீரமைப்பது தொடர்பில் இந்தியாவுடன் இலங்கை பேச்சு நடத்தியுள்ளது என்றும் அமைச்சர் சந்திரசேகர் தகவல்**

யாழ். பலாலி சர்வதேச விமான நிலையம் தற்போது நட்டத்தில் இயங்குகின்றது என்று அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

கொழும்பு தனியார் வானொலியொன்றின்அரசியல்நிகழ்ச்சியில்கலந்துகொண்டு அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“பருத்தித்துறையில் உள்ள துறைமுகத்தை சீரமைப்பது தொடர்பில் இந்தியாவுடன் பல்வேறு பேச்சுகளை நடத்தியுள்ளோம்.

அண்மையில் தொழில்நுட்பக் குழுவொன்றும் பருத்தித்துறைக்கு வந்து சென்றுள்ளது.

இதேவேளை, காங்கேசன்துறை துறைமுகம் என்பது வர்த்தக ரீதியில் இயங்குகின்றது.

யாழ். பலாலி சர்வதேச விமான நிலையம் தற்போது நட்டத்தில் இயங்குகின்றது. எனினும், அதனை நவீனமயமாக்கி வினைத்திறனான சேவையை முன்னெடுக்க வேண்டும்.

பல மில்லியன் பணத்தை செலவழித்து மற்றுமொரு மத்தள விமான நிலையமாக பலாலியை மாற்ற முடியாது.

இந்த அபிவிருத்தித் திட்டங்களை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. அதனை படிப்படியாக செயற்படுத்தவுள்ளோம்.” – என்றார்.

அரசு மேற்படி விடயங்களில் கவனம் செலுத்தவில்லை என ஏனைய தரப்பினரால் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பில் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் மேற்கண்டவாறு கூறினார்.

# நெடுந்தீவில் துப்பாக்கி ஒன்று மீட்பு!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், நெடுந்தீவு - 9 ஆம் வட்டாரப் பகுதியில் பாவனையற்ற காணியில் இருந்து துப்பாக்கி ஒன்று பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை பொலிஸ் நிலைய விசேட புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்றுமுன்தினம் இரவு இந்தத் துப்பாக்கி மீட்கப்பட்டுள்ளது

ஊர்காவற்றுறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் சான்றுப்பொருளாக மேற்படி துப்பாக்கி நேற்று பொலிஸாரால் ஒப்படைக்கப்பட்டுள்ளது

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஊர்காவற்றுறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



**வட மாகாண மரநடுகை மாதம்**
**கார்த்திகை-2025**

“மரங்களின் மீது கரிசனை கொண்ட கடவுள் அவற்றை வரட்சி, நோய்கள், பனிச்சரிவுகள், ஆயிரமாயிரம் சூறாவளிகள் மற்றும் கடும் வெள்ளப்பெருக்குகளில் இருந்து காப்பாற்றினாலும் முட்டாள்களிடம் இருந்து காப்பாற்றினாலும் முட்டாள்களிடம் இருந்து மட்டும் அவரால் அவற்றைக் காப்பாற்ற முடியவில்லை” **-ஜோன் மூர் (அமெரிக்க இயற்கையியலாளர்)**





# அரசாங்க ஊழியர்கள் மீது அரசு கடும் அடக்குமுறை!

## நாமல் எம்.பி. குற்றச்சாட்டு

அரசாங்க ஊழியர்கள் மீது கடமையான அடக்குமுறையில் அநுர அரசு ஈடுபட்டு வருகின்றது என்று குற்றஞ்சாட்டியுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, இந்தக் காலகட்டம் சவாலானது என்றும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

“இலங்கை பொலிஸ் துறை முற்றிலும் அரசியல்மயமாக்கப்பட்டுள்ளது. தேசிய பாதுகாப்பு சரிந்துவிட்டது.

அரசால் விதிக்கப்பட்ட அதிக வரிச்சுமையால் பொதுமக்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றார்கள்.

இந்த அரசால் அநீதி இழைக்கப்பட்டதாக உணரும் அனைவரையும் நவம்பர் 21 ஆம் திகதி நுகேகொடையில்நடைபெறும்எதிர்க்கட்சிப்பேரணியில் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

இது யாரையும் ராஜாவாக்கும் போராட்டம் அல்ல, மாறாக மக்கள் சார்பாக அரசு தனது வாக்குறுதிகளை நிறைவேற்றச் செய்யும் போராட்டப் பேரணி.” – என்றார்.

# பெரிய வெங்காயத்துக்கு விலை நிர்ணயம் இல்லை

## விவசாயிகள் பெரும் சிரமம்



உள்ளூர் பெரிய வெங்காயத்துக்கு உரிய விலை நிர்ணயிக்கப்படாத நிலையில், தமது விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

நுவரெலியா பொருளாதார மத்திய நிலையத்தில் ஒரு கிலோகிராம் பெரிய வெங்காயம் 230 ரூபா முதல் 250 ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

புறக்கோட்டை மொத்த விற்பனை நிலையத்தில் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோகிராம் பெரிய வெங்காயம் 155 ரூபா முதல் 160 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இதேவேளை, பூசணிக்காய் பயிர்செய்கையில் ஈடுபட்டு வரும் விவசாயிகள், பூசணிக்காய்களை விற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளனர்.

தற்போது, ஒரு கிலோகிராம் பூசணிக்காய் 20 ரூபா முதல் 50 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்பட்டு வரும் நிலையிலேயே அவர்கள் இந்த கருத்தை வெளியிட்டுள்ளனர்.

# 200 ரூபா ஊக்குவிப்புத் தொகையை மக்களுக்கு பெற்றுக் கொடுப்பது உறுதி

## அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவிப்பு

அரச நிதியை மோசடி செய்து நாட்டை வங்குரோத்து நிலைக்குதள்ளியவர்களே,மலையகபெருந்தோட்டதொழிலாளர்களுக்கான 200 ரூபா வேதனம் வழங்குவதை எதிர்க்கின்றனர் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

எனினும், அரசாங்கத்தால் வழங்கிய வாக்குறுதிக்கு அமைய 200 ரூபாய் ஊக்குவிப்பு தொகையை பெற்றுக் கொடுப்பது உறுதி என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அரசாங்கத்துக்கு எதிரான போராட்டம், எதிர்க்கட்சியினருக்கு எதிரான போராட்டமாகவே மாறும் எனவும் அவர் கூறியுள்ளார்.

மக்களுக்கு அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளை நினைவுபடுத்த, எதிர்வரும் 21 ஆம் திகதி அரசாங்கத்தை வீழ்த்தும் போராட்டத்தில் ஈடுபடுவதாக எதிர்க்கட்சியினர் குறிப்



பிடுவது விந்தையாக உள்ளதாகவும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால சுட்டிக்காட்டியுள்ளார்.

# மதுபான சாலை அனுமதி மோசடி; தகவல்கள் விரைவில் அம்பலம்

## அரசாங்கம் அறிவிப்பு



மதுபான சாலைகளுக்கான அனுமதி பத்திரம் வழங்குவதில் ஏற்பட்டுள்ள மோசடிகள் குறித்து விரைவில் தகவல்கள் வெளியிடப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

2026 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டம் மீதான குழு நிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் முஜீபூர் ரஹ்மான் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

சுகாதார அமைச்சரும் ஆளும் கட்சியின் பிரதம அமைப்பாளருமான நளிந்த ஜயதிஸ்ஸ இந்த விடயத்தினை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“மதுபானசாலைக்கான அனுமதி வழங்குபோது இரண்டு வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றன.

அதன்படி, முதலில் விலைமனு தாரர்கள் தெரிவு செய்தல் மற்றும் விலை மனுக்கள் கிடைத்த பின்னர் அரசாங்கத்தினால் பின்பற்றப்படும் வழிமுறைகளுக்கு அமைய அனுமதி வழங்கப்படும்.

விலை மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் முறையாக நிலையான கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதா? தூரத்துக்கு அமைய அந்த பகுதியில் மதுபானசாலை அமைக்க முடியுமா? என்பது குறித்து ஆராயப்பட்டு மதுபானசாலைக்கான அனுமதி வழங்கப்படும்.

அதன்படி, அரச அதிகாரிகளினால் இந்த விடயங்களில் எவ்வித தவறும் ஏற்படவில்லை என்றே நிதி அமைச்சின் செயலாளரினால் நீதிமன்றத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், விலை மனுதாரர்களை தெரிவு செய்யப்படும் போது ஏற்பட்டுள்ள மோசடி குறித்தே அரசாங்கம் பட்டியல் ஒன்றை வெளியிட்டது.

அதற்கமைய, விலை மனுதாரர்களை தெரிவு செய்வதில் ஏற்பட்டுள்ள மோசடிகள் மற்றும் அதனுடன் தொடர்புடையவர்களின் தகவல்கள் விரைவில் வெளியிடப்படும்.” என்று தெரிவித்தார்.

# சிறிதரனுக்கு எதிராக விசாரணை ஆரம்பம்; சஞ்சீவவிடம் 6 மணி நேரம் வாக்குமூலம்

இலங்கை தமிழரசு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனுக்கு எதிராக லஞ்ச மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் செய்யப்பட்டுள்ள முறைப்பாடு தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனுக்கு எதிராக முறைப்பாட்டை முன்வைத்த சிவில் அமைப்பின் சஞ்சீவ மஹவத்தவிடம், நேற்று முன்தினம் 6 மணித்தியாலங்களாக வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

லஞ்ச மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு இதனைத் தெரிவித்துள்ளது.

வருமானத்துக்கு அதிகமாக சொத்துக்களை சேர்த்துள்ளதாகக் கூறியே நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனுக்கு எதிராக, லஞ்ச மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.




இதேவேளை தமக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை மறுத்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் விசாரணைகளை எதிர்கொள்ள தயார் என்றும் தெரிவித்துள்ளார்.



# அடுத்த வருடம் மாகாண சபைத் தேர்தல் உறுதி! தேசிய மக்கள் சக்தியே வெற்றிநடை போடும்!!

## எதிரணிக்கு அமைச்சர் பிமல் ரத்நாயக்க பதிலடி

இலங்கையில் ஒன்பது மாகாண சபைகளுக்கும் தேர்தலை நடத்துவதற்குத் தேசிய மக்கள் சக்தி அரசு அஞ்சுகின்றது என்று முன்வைக்கப்படும் எதிரணிகளின் குற்றச்சாட்டை அமைச்சர் பிமல் ரத்நாயக்க அடியோடு நிராகரித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"அடுத்த வருடம் தேர்தல் நிச்சயம் நடத்தப்படும். எதிரணிகள் கூட்டணி வகுத்து வந்தால்கூட ஆளுங்கட்சியே வெற்றி நடை போடும். எதிரணிகள் மண்கவ்வும்.

தேசிய மக்கள் சக்தி அரசு கவிழாது. மக்கள் சக்தி எமக்கு இருக்கின்றது."

– என்றார்.

மாகாண சபைத் தேர்தலை அடுத்த வருடம் நடத்துவதற்கு அரசு திட்டமிட்டிருந்தாலும் தேர்தல் முறைமை தொடர்பில் குழப்பம் நீடிக்கின்றது.

தேர்தலுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதால் தேர்தல் முறைமை தொடர்பில் நாடாளுமன்றமே தீர்மானிக்க வேண்டும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அறிவித்துள்ளார்.

இந்நிலையில், தேர்தல் முறைமை தொடர்பில் தீர்மானமொன்றை எடுப்பதற்காகப் பிரதமர் தலைமையில் குழுவொன்றை அமைக்குமாறு ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பொலிஸ் உயர் அதிகாரிகள் சிலருக்கு இடமாற்றம்

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன், இலங்கை பொலிஸார் சில உயர் அதிகாரிகளுக்கு புதிய இடமாற்றங்களும், மேலதிக பொறுப்புகளும் வழங்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம், சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் ரன்மல் கொடித்துவக்கு தற்போது வகிக்கும் குற்றச் செயல்கள் மற்றும் போக்குவரத்துப் பிரிவின் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் பதவிக்கு மேலதிகமாக, சிறுவர் மற்றும் பெண்கள் துஷ்பிரயோகத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவின் பொறுப்பையும் கவனிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன், சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் டீ.சி.ஏ. தனபால வட மத்திய மாகாணத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபராகவும், சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் எஸ்.சி. மெதவத்த மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் புத்திக சிறிவர்தன வட மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

# டெங்கு நுளம்பு பெருகும் சூழலை வைத்திருந்த 10 காணி உரிமையாளர்களுக்கு தண்டப்பணம்

பருத்தித்துறை, வல்வெட்டித்துறை நகரசபைகளுக்கு உட்பட பகுதிகளில் டெங்கு நுளம்பு பெருகும் வகையில் சூழலை வைத்திருந்த 10 காணி உரிமையாளர்களிடம் பருத்தித்துறை நீதிமன்றினால் 80 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை நகரசபை மற்றும் பருத்தித்துறை நகரசபையின் எல்லைக்குட்பட்ட பிரிவுகளில் கடந்த வாரம் டெங்கு கட்டுப்பாட்டு களவிஜயம் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது நுளம்பு பெருகக்கூடியவாறான சூழலினை வைத்திருந்த 10 காணி உரிமையாளர்களுக்கு எதிராக நகரசபைகளுக்கு பொறுப்பான பொதுச் சுகாதார பரிசோதகரான ப. தினேஷினால் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு விசாரணையின் போது குற்றஞ்சாட்டப்பட்ட அனைத்து காணி உரிமையாளர்களும் குற்றத்தை ஏற்றுக் கொண்டதன் அடிப்படையில், நீதிமன்றினால் காணி உரிமையாளர்களிற்கு தலா 8 ஆயிரம் ரூபா வீதம் மொத்தமாக 80 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முன் நின்று ஊக்குவித்தவர் அவர்தான். 'நீங்கள் போராட்டத்தை நடத்துங்கள், மனம் தளராமல் தொடருங்கள்!' என்று போராட்டக்காரர்களை உசுப்பி விட்டு விட்டு அவர் வெளிநாட்டுக்கு விஜயம் செய்தி ருந்தார். இரண்டு, மூன்று வாரங்கள் மேற்கத்திய விஜயத்தை முடித்து நாடு திரும்பிய அவர், நாடு திரும்பிய பின னரும் போராட்டத்தைக் கைவிட மாட் டோம், அது தொடரும் என்று சூளுரைத் திருந்தார். ஆனால் மூன்றாம் நபருக்குத் தெரியாமல் – சத்தம் சந்தடியின்றி அவர் ஜனாதிபதியைச் சந்தித்துப் போராட் டத்தைக் கைவிட இணங்கி விட்டார் என்ற செய்தியை முதன் முதலில் முரசு நாளித ழிலும், எனது பத்தியிலும் நாம் தெரிவித்த போதும், எங்கள் பத்திரிகை மீது அந்தத் தரப்பினர் கொதித்தெழுந்து சீறி விழுந்த னர். சமூக ஊடகங்கள் ஊடாக மிக மோசமாக விமர்சித்தனர்.

ஆனால் ஒரு மாதத்துக்கு முன்னரே ஜனாதிபதியை சந்தித்து போராட்டத்தை கைவிட மன்னர் ஆயர் இணங்கிய போது போராட்டம் முடிவுக்கு வந்துவிடும் என்பது 'எப்பவோ முடிந்த காரியமாக' அம்பலமாகிவிட்டது.

வெற்றி கிட்டும் வரை போராட்டம் உறுதி என்று பொறுப்பின்றி அறிவிப் பதும், இடைவெளியில் சரியான காரணங் கள் கூறாமல் இடைநிறுத்துவதும் பலத்த சந்தேகங்களைத் தருகின்றன.

ஜனாதிபதி – ஆயர் சந்திப்பின் போது இடம்பெற்ற விடயங்கள், அளிக்கப்பட்ட மாற்றீடுகளுக்கான வாக்குறுதிகள் பற்றி பல்வேறு கதைகள் உள்ளன. அவை உறுதியாகும் போது இன்னும் பல நெருக் கடிகள் வர வாய்ப்பு உண்டு.

மக்களை உணர்வெழுச்சிக்கு உள் ளாக்கும் போராட்டங்களை கண்மூடித் தனமாக அறிவித்து முன்னெடுப்பது பொறுப்பற்ற தனமாகும். இப்படி அரை வழியில் கைவிடும் போராட்டத்தை மூன்று வாரங்களுக்கு முன்னரே கைவிட்டிருக்க லாம். யாரின் காதில் பூ வைப்பதற்காக இவ்வளவு நாள் இழுபறியும் என்பது மக் களுக்குத் தெரியும்.

* * *

இன்றைய இந்தப் பகுதியில் நான் தருகின்ற விடயங்கள் என் சொந்தச் சரக் கல்ல. 'மௌரட்ட' செய்தியில் 'அரசியல் உள்பக்கம்' என்ற தலைப்பில் அதன் விசேட செய்தியாளர் நேற்று வெளி யிட்ட தகவல்கள்தான்.

தேசிய மக்கள் சக்தி அரசு, அடுத்த வருடத்தின் மூன்றாவது காலாண்டில் மாகாண சபை தேர்தலை நடத்துவதற்கான அறிவித்தலை வெளியிடும் என்று கோடி காட்டும் அந்தச் செய்தியாளர், அதற்கு முன்னர் அரசாங்கம் இரண்டு விடயங்க ளில் அரசியல் வெற்றிகளை நிலை நாட்டத் திட்டமிடுவதாகத் தெரிவிக்கிறார். அந்த முயற்சியில் அரசின் நடவடிக்கை கணிசமாக முன்னேறி இருப்பதாகவும் அவர் குறிப்பிடுகின்றார்.

அவரின் தகவலின்படி –

ஒன்று – மத்திய வங்கி பிணை முறி ஊழல், முறைகேடுகள் பற்றிய புலன்விசா ரணை.

அடுத்தது – வெளிநாட்டில் பதுக்கப் பட்டு இருக்கும் ராஜபக்ஷக்களின் சொத் துக்களை கண்டுபிடித்து மீட்பது.

இந்த இரண்டு விடயங்களிலும் வெளியே தெரியாத அளவுக்கு கணிச மான முன்னேற்றத்தைக் கண்டுள்ள அரசு அவற்றின் பெறுபேறுகளைப் பகி ரங்கப்படுத்தி, அதன் மூலம் அரசின் மீதான மக்களின் செல்வாக்கை அதிக ரிக்கும் விதத்தில் நடவடிக்கைகளை எடுத் துக் கொண்டு, மாகாண சபை தேர்தலை அறிவிக்கும் என்று குறிப்பிடுகிறார் அந் தச் செய்தியாளர்.

பிணைமுறி விவகாரத்தில் அப் போது மத்திய வங்கி ஆளுநராக இருந்த அர்ஜுனா மகேந்திரனை சிங்கப்பூரி லிருந்து இலங்கைக்கு விசாரணைக்கு கொண்டு வந்தால் மட்டுமே புலனாய்வி லும், சட்ட நடவடிக்கைகளிலும் முன்னேற் றம் காண முடியும் என்று பொதுவாகக் கூறப்பட்டு வருகிறது. ஆனால் சிங்கப்பூர் பிரஜையான அர்ஜுனா மகேந்திரனை இங்கு நாடு கடத்தச் செய்வது இயலாத விவகாரமாக நீடிக்கிறது.

இதற்கிடையில் –

இப்போதைய அரசுக்கு மிக நெருக்க மானவர் என்று கூறப்படும் பத்திரிகையா ளர் உவிந்து குருகுலசூரிய லண்டனை தளமாகக் கொண்டு இயங்குகிறார். அவர் அண்மையில் அர்ஜுனா மகேந்திரனுடன் வட்ஸ் அப் மூலம் தொடர்பாடல் செய்து உரையாடி இருக்கிறார். அப்போது தாம் எடுத்த அர்ஜுனா மகேந்திரனின் படம் ஒன்றையும் அவர் தனது முகப்புத்தகத் தில் பதிவிட்டுள்ளார். அது மாத்திரமல்ல, இலங்கையின் ஜனாதிபதிக்கு தெரி விக்கும் படி செய்தி ஒன்றைத் தம்மிடம் அர்ஜுனா மகேந்திரன் தந்துள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். ஆயி னும், அந்தச் செய்தியின் உள்ளடக்கம் என்ன என்பதை உவிந்து குருகுலசூரிய வெளிப்படுத்தவில்லை.

ஆனால், அதைத் தொடர்ந்து கட்ட விழ்ந்த பல்வேறு விடயங்களை அடுத்து இலங்கையிலிருந்து இந்த விடயத்தை விசாரிக்கும் இரண்டு உயர் அதிகாரிகள் விரைவில் சிங்கப்பூர் செல்வார்கள் என்றும், அதன் பின்னர் இந்த பிணை முறி மோசடியின் உண்மை சூத்திதாரிகள் யார், அந்த மோசடி மூலம் பயனடைந் தவர்கள் யார் என்ற விடயங்கள் எல் லாம் அம்பலமாகும், இந்த விசாரணை எதிர்பாராத திருப்பத்தோடு முன்நகரும் என்றெல்லாம் அந்த 'அரசியல் உள்பக் கம்' செய்திக் கட்டுரையில் விவரிக்கப் பட்டுள்ளது.

ராஜபக்ஷக்களின் சொத்துக்கள் அமெரிக்காவில் இருக்கின்றமை தொடர் பில் பல விடயங்களை அந்த நாட்டின் அதிகாரிகளின் உதவியோடு இலங்கை யின் புதிய ஆட்சிப் பீடம் கண்டறிந்து, வெளிப்படுத்தி, நடவடிக்கை எடுக்கக்கூடிய சூழல் உருவாகி இருப்பதாகவும் அந்த செய்திக் கட்டுரையில் கோடி காட்டப் பட்டுள்ளது.

இந்த இரண்டு விடயங்களையும் போட்டு உடைத்து, உண்மைகளை அம் பலப்படுத்தி விட்டு, மாகாண சபைத் தேர் தலை அறிவித்தால், அந்தத் தேர்தலில் எதிர்ப்பின்றி காத்திரமான வெற்றியை ஆளும் தரப்பு பெற்றுக் கொள்ள முடியும் என்று அரசுத் தரப்புக் கருதுவதாக அந் தக் கட்டுரை சுட்டுகின்றது.

அர்ஜுனா மகேந்திரன் குத்துக்கரணம் அடித்து, சிங்கப்பிரிலிருந்து உண்மைக ளைத் தாமாகவே வெளியிட வாய்ப்பு உண்டா, ராஜபக்ஷக்களின் சொத்துக்கள் அமெரிக்காவில்தான் இருக்கின்றனவா, அவற்றை அம்பலப்படுத்த முடியுமா என் பவற்றை எல்லாம் நாங்கள் பொறுத்தி ருந்துதான் பார்க்க வேண்டும்.

---

## தோற்கடிக்க முடியாத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடுகள் தமது இராணுவக் கல்லூ ரிகளில் கற்பிக்கின்றன. அந்தளவுக்கு அவர் இராணுவ ஞானம் உள்ளவராக வும், தோற்கடிக்க முடியாத தலைவராக வும் விளங்கினார்."

– இவ்வாறு விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் தெரிவித்தார்.

யாழ். நல்லூர் கிட்டு பூங்காவில் தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தால் நேற்றுமுன் தினம்முன்னெடுக்கப்பட்டவடக்குமாகாண மரநடுகை மாத நிகழ்வில் கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்டு உரை யாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

"தமிழீழ விடுதலைப் புலிகளின் தலை வர் பிரபாகரனுக்கும் எனக்கும் இடையி லான நெருக்கம் ஆழமானது. பல்வேறு உரையாடல்களின் போது ஈழம் தொடர்பி லும், தான் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் முரண்கள் தொடர்பிலும் அவர் என்னுடன் பகிர்ந்து கொண்டார். "ஈழம் மலரும் அப்போது உங்களை நான் அழைப்பேன். அதுவரை எளிய மக்களுக் காகத் தமிழகத்தில் போராடுங்கள்" என்று அவர் கூறிய வார்த்தைகள்தான் என்னை ஊக்கப்படுத்தின.

அண்ணன் பிரபாகரன் இராணுவக் கல்லூரியில் பயிலவில்லை, போர்ப் பயிற்சி களை மேற்கொள்ளவில்லை, அரசி யல் சித்தாந்தங்களை கற்கவில்லை. ஆனால், அனைத்து விடயங்களிலும் ஞானம் படைத்தவராக இருந்தார்.

ஈழ விடயத்தில் எதற்காக நோர்வே இவ்வளவு தூரம் அக்கறை காட்டுகின் றது? எதற்காக எரிக் சொல்ஹெய்ம் இவ் வளவு ஈடுபாடு காட்டுகின்றார்? என்ற கேள் விகள் என்னைத் துருத்திக் கொண்டிருந் தன. இந்த விடயத்தை நான் அண்ணனி டம் கேட்டபோது, "அமெரிக்காவின் கோர முகம் இஸ்ரேல், அமெரிக்காவின் அன்பு முகம் நோர்வே" என்று அப்போது அவர் என்னிடம் கூறினார். அந்த வார்த்தை களின் வலிமையை பின்நாள்களில் என்னால் உணர முடிந்தது.

நான் அமெரிக்காவைப் பற்றிக் கேட்க வில்லை. கேட்டது நோர்வே தொடர்பில் தான். ஆனால் அவர் வழங்கிய பதில், அண்ணன் பிரகாரகன் எவ்வளவு தொலை நோக்குப் பார்வையுள்ளவர் என்றும், எவ் வளவு தூரம் அவர் ஞானம்பெற்ற தலை வராக இருந்தார் என்பதையும் 2002ஆம் ஆண்டே உணர்த்தியது. இதுதான் அண்ணன் பிரபாகரன்.

மாவீரர் தினத்தில் பிரபாகரன் என்ன பேசப்போகின்றார் என்பதற்கான காத்தி ருப்பைக் கொண்டிராத உலக நாடுகளே இல்லை. சிங்கள தேசத்தை மட்டுமல்லா மல், இந்திய ஆட்சியாளர்களை மட்டு மல்லாமல் ஒட்டுமொத்த உலக நாடுகளை யும் தன் மீது கவனக் குவிவைச் செலுத் தக்கூடிய பெரும் சக்தியாக பிரபாகரன் திகழ்ந்தார்.

இன்றைய தலைவர்கள் ஒரு நாளில் பத்து மேடைகளில் பேசுகின்றனர். வருடத் தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மேடைக ளில் பேசுகின்றனர். ஆனால், அண்ணன் பிரபாகரன் ஆண்டில் ஒருமுறை மட்டும் தான் பேசுவார். அந்த உரையை உலக நாடுகள் காத்துக் கிடந்து கவனிக்கும். அவரின் உரைகள் மிக நுட்பமானவை, ஆழமானவை, தொலைநோக்குப்பார்வை யுள்ளவை.

தனது உரைகளில் எந்தவொரு இடத் திலும் இந்திய அரசை ஈழத் தமிழர்க ளுக்கு எதிரான சக்தியாகப் பிரபாகரன் பதிவு செய்யவில்லை. ஏனெனில், இந் தியா எம்முடைய நோக்கங்களை ஏற்றால் தான் எமது அபிலாஷைகள் நிறைவேறும் என்ற தெளிந்த அறிவு பிரபாகரனுக்கு இருந்தது." – என்றார்.

# செல்வச்சந்நிதி சுற்றாடலில் அமைந்துள்ள வியாபார நிலையங்களில் திடீர் சோதனை

வல்வெட்டித்துறை நகராட்சிமன்றத் தின் ஆளுகைக்குட்பட்ட தொண்டை மானாறு செல்வச்சந்நிதி சுற்றாட லில் அமைந்துள்ள உணவகங்கள் உள்ளிட்ட வியாபார நிலையங்களில் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட் டது.

இதன்போது உணவகம் மற்றும் பானிப்பூரி விற்பனை நிலையம் என் பவை சுகாதார விதிமுறைகளை பின் பற்றாது செயற்பட்டமை உறுதிசெய்யப் பட்டது.

இதையடுத்து, மேற்படி இரு விற் பனை நிலையங்களுக்கு எதிராக வல் வெட்டித்துறை நகராட்சி மன்றத்தின் பொது சுகாதார பரிசோதகரால் பருத் தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் தாக் கல் செய்யப்பட்ட வழக்கானது நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது இரு உரிமையாளர்க ளிற்கும் மொத்தமாக 50 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டமை குறிப் பிடத்தக்கது.

# ஹாட்லி மைந்தர்களின் நினைவேந்தல் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஹாட்லிக் கல்லூரி யின் மைந்தர்களின் நினைவேந்தல் நிகழ்வு வடமராட்சி இன்பர்சிட்டி கடற்கரை யில் அவர்களது குடும்பத்தவர் மற்றும் நண்பர்களால் நாளை திங்கள் கிழமை அனுஷ்டிக்கபட உள்ளது.

கல்வி செயற்பாட்டின் நிமித்தம் வடம ராட்சி இன்பர்சிட்டி கடற் பகுதியில் 1999 ஆம் ஆண்டு நவம்பர் 17ஆம் திகதி, கடல் வள ஆராட்சியில் ஈடுபட்டிருந்தவேளை கடல் அலையில் சிக்குண்டு 4 மாண வர்கள் உயிரிழந்திருந்தனர்.

யாழ். ஹாட்லி கல்லூரியின் 2000 ஆம் ஆண்டு உயர்தர வகுப்பு மாண வர்களான பூரணமூர்த்தி கந்தர்வன், சிவநாதன் இரவிசங்கர், சுந்தரலிங்கம் சிவோத்தமன் மற்றும் பாலகிருஸ்ணன் பிரதீபன் ஆகிய 4 பேரின் 26 ஆவது ஆண்டு நினைவேந்தல் மற்றும் பேரா தனை பல்கலைக் கழகத்தில் பொறி யியல் பீட மாணவனாக கல்வி கற்றுவந்த வேளை ரயில் விபத்தில் சிக்கி உயிரிழந்த மரியரட்ணம் குணரட்ணம் ஆகியோ ரின் 21 ஆவது ஆண்டு நினைவேந் தல் நிகழ்வும் நாளை காலை 9.00 மணியளவில் வடமராட்சி இன்பர்சிட்டி கடற்கரையில் அனுஷ்டிக்கபட உள் ளது.

உயிரிழந்த மாணவர்களது குடும்பத் தினர், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் ஒன்றிணைந்து இந்த நினைவேந்தல் நிகழ்வை அனுஷ்டிக்க உள்ளமை குறிப் பிடத்தக்கது.

## சமஷ்டி தீர்வை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திர குமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசியப் பேரவையினர், இந்திய நாடாளுமன்ற உறுப்பினரும் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவருமான தொல். திருமாவளவனை நேற்று சனிக் கிழமை யாழ்ப்பாணத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச்சந்திப்புதொடர்பாகஊடகங்களி டம் கருத்துத் தெரிவித்தபோதே கஜேந்திர குமார் பொன்னம்பலம் எம்.பி. மேற் கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இலங்கை அரசு தவறான பிரசா ரத்தை வெற்றிகரமாக முன்னெடுத்து வரு கின்றது. கடந்த நாடாளுமன்றத் தேர் தல் மூலம் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியத் தைக்கைவிட்டுவிட்டனர்என்றும்,அதனால் தான் தமிழ் மக்கள், தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்துள்ளனர் என்றும், தங்கள் தீர் வையே தமிழ் மக்களும் ஏற்கின்றனர் என்றும் இலங்கை அரசு பிரசாரம் செய்து வரும் நெருக்கடி மிக்க காலத்தில் புதிய அரசமைப்பு உருவாக்கப்படுவது தொடர் பாகப் பேசப்படுகின்றது.

இனப்பிரச்சினை தொடர்பாக பேசும் போது நல்லாட்சி காலத்தில் தயாரிக்கப் பட்ட ஏக்ய ராஜ்ய அரசமைப்பை நடை முறைப்படுத்துவதன் மூலம் தமிழ் மக்க ளின் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என தேசிய மக்கள் சக்தி கூறி வருகின் றது.

வடக்கு,கிழக்குமாகாணங்களில்தேசிய மக்கள்சக்தியின்எட்டுநாடாளுமன்றஉறுப் பினர்களைத் தவிர ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் பொது நிலைப் பாட்டுக்கு வந்து அறுதிப் பெரும்பான் மையைக் காட்ட இலங்கைத் தமிழரசுக் கட்சி மற்றும் ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணியுடன் நாம் பேச முயற்சித்தோம். அந்த முயற்சி சுமந்திரன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளராக வந்த பிறகு முறிக்கப்பட்டது.

இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஜனாதி பதியைச் சந்தித்துப் பேச நடவடிக்கை எடுக் கும் தருணத்தில் தொல். திருமாவளவனு டன் எமது சந்திப்பு நடத்தப்பட்டுள்ளது.

தமிழ் இனப்பிரச்சினைக்கு இந்திய நிலைப்பாடு முக்கியம். இந்திய – இலங்கை ஒப்பந்தம் என்பது தமிழ் மக்க ளின் தீர்வு சம்பந்தமாக உத்தியோகபூர்வ மாக இலங்கை அரசை ஏற்க வைத்த ஒப் பந்தமாகும்.

அந்த ஒப்பந்தத்தை நடைமுறைப் படுத்துவது என்ற பெயரில் இலங்கை அரசு ஒருதலைப்பட்சமாக நிறைவேற்றிய 13ஆம் திருத்தம் என்பது இந்திய – இலங்கை ஒப்பந்தத்தில் கூறப்பட்ட விடயங்களை மறுத்தது.

தமிழ் மக்களுடைய இனப்பிரச்சினை ஒற்றையாட்சிக்குள் 38 வருடங்களாக முடக்கப்பட்டு தமிழ் மக்கள் எந்தப் பலனை யும் அடையாமல் இருக்கும் சூழலில் இந்தியா தவறான நிலைப்பாட்டை வலி யுறுத்துவது எமக்குப் பலவீனத்தை ஏற்ப டுத்துகின்றது.

இந்த நிலையில் மாற்றத்தை ஏற்படுத் துவதாக இருந்தால் இந்திய மத்திய அரசு தனது நிலைப்பாட்டை மாற்ற வேண்டும்.

இலங்கையைப் பொறுத்தவரையில் இந்தியா பலமாக உள்ளது. இந்தியாவு டன் இணைந்து போகாமல் இலங்கை யின் மிக மோசமாகியுள்ள பொருளா தாரத்தை மீள உயர்த்த முடியாத நிலை உள்ளது. இது இந்திய மத்திய அரசின் பேரம் பேசலுக்கான தன்மைகளை அதிக ரித்துள்ளது. அதனைப் பாதிக்கப்பட்ட ஈழத்தமிழர்கள் பயன்படுத்த வேண்டும். அந்தவகையில் தொல். திருமாவளவ னைச் சந்தித்து இந்த விடயங்களைத் தெளிவுபடுத்தினோம்.

அவர் தமிழக ஆட்சியில் முக்கிய பங் காளி. ஈழத்தமிழர் உரிமைகள் தொடர்பாக தி.மு.க. ஆட்சியில் தெளிவான நிலைப் பாட்டை எடுக்க வேண்டும் என அவருடன் பேசினோம்.

ஈழத்தமிழர் தொடர்பாக உறுதியான நிலைப்பாட்டை தமிழக அரசு எடுக்க வலி யுறுத்துவதற்குத் தொல். திருமாவளவன் அத்தியாவசியம்.

விடுதலைப் போராட்டம் மௌனிக்கப் பட்டு இன்று வரை இன அழிப்புக்கு முகம் கொடுக்கின்றோம். தற்போது உயிர்கள் போகாவிட்டாலும் கூட தமிழ் மக்களின் இருப்பு கேள்விக்குறியாகிக் கொண்டு வருகின்றது. பொருளாதார ரீதியிலும் தமிழர் தேசம் பலவீனப்பட்டுள்ளது.

போர் முடிவடைந்த பின்னர் ஈழத் தமிழர்களின் நிலைப்பாடு தொடர்பில் தமிழக அரசு அமைதியாக இருப்பது ஈழத்தமிழர்களைப் பலவீனப்படுத்தி இன அழிப்புக்கு உள்ளாக்கும்.

தமிழகத்தில் உள்ள அனைத்து தரப்பு களையும் தமிழ்த் தேசியப் பேரவை அணு கத் திட்டமிட்டுள்ளது. தமிழ்த் தேசம், இறை மையுடனான சமஷ்டியைக் கோர தமி ழகத்தின் அனைத்து தரப்பினரும் வலியு றுத்தும் நடவடிக்கையின் ஒரு கட்டமாக தொல். திருமாவளவனுடனான சந்திப்பு அமைந்தது.” – என்றார்.

## இந்தியாவுடனான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இராமேஸ்வரம் – தலைமன்னார் தரை வழிப் பாதையில் உடன்பாடில்லை என் றும் அமைச்சர் சந்திரசேகர் குறிப்பிட்டார்.

எனினும், இராமர் பாலத்தைச் சென்று மக்கள் பார்வையிடுவதற்கான வாய்ப்பு களை ஏற்படுத்திக் கொடுக்கும் செயற்பா டுகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## குழப்பங்களின் நோக்கம்

''அதிகப்படியான சமையல் காரர்கள் சேர்ந்தால் சூப்பைக் கெடுத்து விடுகிறார்கள்'' என்று ஆங்கில சொல்லாடல் ஒன்று உண்டு. ஒரு பணியில் அதிகமானோர் ஈடுபட்டால், முரண்பட்ட கருத்துக்கள் மற்றும் குழப்பங்கள் காரணமாக அது குழம்பிப் போகும் என்பதுதான் அந்தச் சொல்லாடலின் அர்த்தம்.

இதற்கு மறுவழமாக, தென்னிலங்கையில் ஒரு விடயத்தை குழப்புவதற்கு என்றே பலவிதமான தரப்பினர் முரண்பாடான கருத்துக்களை வெளிப்படுத்தி குளறுபடி பண்ணி வருகிறார்கள்.

அது - மாகாண சபை தேர்தலை நடத்தாமல் இழுத்தடிப்பதற்கான ஒருவகை சதித்திட்டமாகும்.

2017 முதல் மாகாண சபை தேர்தல் நடத்தப்படவில்லை. மாகாண சபை தேர்தல்களை நடத்துவதற்கான சட்டம் வேறு காரணங்களை குறிப்பிட்டு, அடுத்த ஒரு வருடத்திற்குள் மாற்றீடு செய்யப்படும் என்று உறுதிமொழி அளித்து அப்போது நீக்கப்பட்டது.

ஆனால், அந்தச் சட்டம் அதற்குப் பின்னர் மீளச் சீரமைத்து இன்னமும் கொண்டுவரப்படவில்லை. அதைக் காட்டியே மாகாண சபை தேர்தலை நடத்தாமல் இழுத்தடித்து வருகின்றன மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசுகள்.

அதற்குப் பின்னர் அதிகாரத்துக்கு வந்த நான்கு அரசுகளுமே தேர்தலை நடத்துவதற்கான நிலைமை - சூழ்நிலை - அரசியல் ரீதியாகத் தங்களுக்குச் சாதகம் இல்லை என்ற ஒரே காரணம் கருதி மட்டுமே தேர்தலை இழுத்தடித்து வருகின்றன. இந்த வரிசையில் இப்போது தேசிய மக்கள் சக்தி அரசு தன் கைவரிசையைக் காட்டுகிறது.

ஆட்சித் தரப்பிலிருந்து இந்தத் தேர்தல் விவகாரம் தொடர்பில் முரண்பாடான தகவல்கள் ஒரே சமயத்தில் வந்து கொண்டிருக்கின்றன.

தடைப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்கான வழிகளைக் கண்டறிய, அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் தொடர்புடைய சிவில் சமூக அமைப்புகளின் கூட்டத்தை அரசாங்கம் கூட்ட உள்ளது என்று மாகாண சபைகளுக்குப் பொறுப்பான பொது நிர்வாகம், உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் டாக்டர் சந்தன அபேரத்ன தெரிவிக்கின்றார்.

மாகாண சபைத் தேர்தல்கள் மற்றும் விடயங்களை ஆராய்வதற்கு ஒரு தெரிவுக் குழு நியமிக்கப்படும் என்று ஆளுங்கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் அமைச்சர் பிமல் ரத்நாயக்க நேற்று நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

ஜனாதிபதியோ தம் பங்குக்கு இந்தத் தேர்தலை நடத்துவதற்கு இன்னும் சற்றுக் கால அவகாசம் தாருங்கள் என்கிறார்.

அவரின் ஆளும் பங்காளிகளின் பிரதான கட்சியான ஜே.வி.பியினுடைய செயலாளர் ரில்வின் சில்வாவோ மாகாண சபை முறைமையே தேவையில்லை என்கிறார்.

ஆளும் தரப்பினர் இவ்விடயத்தில் மாறி மாறிக் கருத்துக் கூறிப் போட்டுக் குழப்பி அடிப்பதை பார்த்தால் இந்த தேர்தல் இப்போதைக்கு சாத்தியமாகாது என்றுதான் தோன்றுகிறது.

# சம்பள அதிகரிப்பினை விரும்புகிறோம்: முறைமைக்கு எதிர்ப்பு என்கிறார் நாமல்

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் அல்லது தனியார் துறையினருக்கான சம்பளத்தை அதிகரிப்பதற்குத் தாங்கள் எதிரானவர்கள் அல்ல என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக் ஷ தெரிவித்துள்ளார்.

தலதா மாளிகையில் வழிபாடுகளில் ஈடுபட்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் இதனை குறிப்பிட்ட அவர், சம்பள உயர்வை நடைமுறைப்படுத்தும் முறைமை தொடர்பிலேயே எதிர்ப்பு இருப்பதாக சுட்டிக்காட்டியுள்ளார். இதுதொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

“ஏழை மக்களிடம் வரி விதித்துச் சேகரிக்கும் பணத்தை பெரும் வர்த்தகர்களுக்கு வழங்கும் நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொள்வதற்குத் நாங்கள் உடன்பட மாட்டோம்

அரசாங்கம் தொழிலாளியின் பக்கத்தில் இல்லாமல், தெளிவாக முதலாளியின் பக்கத்திலேயே இருக்கிறது. தொழிலாளியிடம் வரி வசூலித்து முதலாளிக்கு வழங்குவதே இப்போது நடக்கிறது.

போலியான நடைமுறைகளை உருவாக்கி, வேதன உயர்வைச் செய்யாமல் பின்வாங்க அரசாங்கம் முயற்சிக்கிறது.

எனவே, அரசாங்கம் ஒரு கொள்கை ரீதியான முடிவை எடுத்து பெருந்தோட்டத் தொழிலாளரின் வேதனத்தை அதிகரிக்க வேண்டும்.

தேர்தலின்போது வழங்கப்பட்ட அன்றாட ஊதியத்தை அதிகரிக்கும் வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும்.

அத்துடன், தனியார் துறைக்குக் கொடுப்பனவு வழங்குவதற்கான சட்டப்பூர்வ பின்னணி என்ன என்பதையும் அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டும்.



பொதுமக்களின் வரிப் பணத்தில் வர்த்தகர்களுக்குச் சலுகை வழங்க அரசாங்கம் நினைத்தால், அந்தக் கொடுப்பனவை ஆடைத் தொழிற்துறை, கடற்றொழில் மற்றும் விவசாயத் துறையில் ஈடுபட்டுள்ள வர்த்தகர்களுக்கும் வழங்க வேண்டும்.

அத்துடன், பெருந்தோட்டத் தொழிலாளர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதுடன், அவர்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். எனவும் தெரிவித்துள்ளார்.

# 350 மருந்துகளின் விலைகள் குறைப்பு



தற்போது சுமார் 350 வகையான மருந்துகளின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன என தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை தெரிவித்துள்ளது.

மேலும், எதிர்காலத்தில் சுமார் 250 வகையான மருந்துகளின் விலையை ஒழுங்குபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அந்த அதிகார சபை தெரிவித்துள்ளது.

சிறுவர் நோய்கள், இருதய நோய்கள், புற்றுநோய், உயர் இரத்த அழுத்தம் உள்ளிட்ட பல நோய்களுக்காக வழங்கப்படும் மருந்துகளின் விலைகளே இவ்வாறு குறைக்கப்பட்டுள்ளன.

இதில், சில மருந்துகளின் விலை 50 சதவீதத்தால் குறைந்துள்ளதாகவும் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை சுட்டிக்காட்டியுள்ளது.

இதன்படி, மருந்துகளுக்கு விதிக்கப்பட்டுள்ள அதிகபட்ச விலையை மீறி அவற்றை விற்பனை செய்வோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அந்த அதிகார சபையின் தலைவர் விசேட வைத்தியர் ஆனந்த விஜேவிக்ரம தெரிவித்துள்ளார்.

# த.வெ.கவினருக்கு எஸ்.ஐ.ஆர். படிவம் கிடைக்கவிடாமல் தடுக்கப்படுகின்றது

## விஜய் குற்றச்சாட்டு



"எஸ்.ஐ.ஆர் படிவம், த.வெ.கவினருக்கு கிடைப்பதில்லை, கொடுக்க மறுக்கிறார்கள் என்ற புகார் எழுந்துள்ளது. தற்போது ஆட்சியில் இருப்பவர்கள், அவர்களுக்கு கைப்பாவையாக இருக்கக் கூடியவர்கள்தான் இதைச் செய்கிறார்கள்."

– இவ்வாறு விஜய் குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக த.வெ.க. தலைவர் விஜய் வெளியிட்டுள்ள காணொலி பதிவில்,

"வரப்போகும் தேர்தலில் நாம் யார் என்பதைக் காட்ட வேண்டும், நமது பலம் என்ன என்பதைக் காட்ட வேண்டும். அதற்கு வலிமை மிகுந்த அந்த ஆயுதத்தை நாம் கைகளில் எடுக்க வேண்டும். அந்த ஆயுதம் வேறு எதுவும் இல்லை, ஓட்டு, வாக்கு, ஜனநாயகம்தான். அது இருந்தால்தான் வெற்றியை நோக்கி நம்மால் பயணிக்க முடியும்.

வாக்குச்சாவடி முன்பாக தமிழ்நாடே திரண்டு நிற்க வேண்டும். அதைப் பார்த்து தமிழக வெற்றிக் கழகம்தான் தமிழ்நாடா அல்லது தமிழ்நாடுதான் தமிழக வெற்றிக் கழகமா என்பது போல இருக்க வேண்டும். வீடு என்று ஒன்று இருந்தால்தான் அதற்கு ஓடு மாற்ற முடியும் என்று அண்ணா சொல்லி இருக்கிறார். அதைப் போல ஓட்டு என்று ஒன்று இருந்தால்தான், இந்த நாட்டையே காப்பாற்ற முடியும்.

ஒன்லைனில் நாம் பதிவிறக்கம் செய்து வழங்குவதாக இருந்தால், வாக்காளர் அடையாள அட்டையில் இருக்கும் பெயரும், ஆதாரில் உள்ள பெயரும் ஒரே மாதிரியாக இருந்தால்தான் அது ஏற்கப்படும். இல்லாவிட்டால் ஏற்கப்படாது. எனவே, அதை கவனமாகச் செய்யுங்கள். பயனர்களுக்கு எளிதாக இருக்கும் முறையில் இதைச் செய்யலாமே என்று கேட்டதற்கு அதற்கெல்லாம் ஆட்கள் கிடையாது, அதையெல்லாம் செய்ய முடியாது என்று சொல்லிவிட்டார்கள். எனவே, முதல்முறை வாக்காளர்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். நம்பிக்கையோடு இருக்க வேண்டும். நல்லதே நடக்கும். வெற்றி நிச்சயம்." என்று குறிப்பிட்டுள்ளார்.

## பிஹார் தோல்வி எதிரொலி:

# அரசியலையும் குடும்பத்தையும் விட்டு விலகுகின்றார் லாலு மகள் ரோகிணி



அரசியலையும் தனது குடும்பத்தையும் விட்டு விலகுவதாக லாலு பிரசாத் யாதவின் இரண்டாவது மகளான ரோகிணி ஆச்சார்யா தெரிவித்துள்ளார்.

பிஹார் சட்டப்பேரவைத் தேர்தலில் லாலு பிரசாத் யாதவின் ராஷ்ட்ரிய ஜனதா தளம் கட்சி மிகப் பெரிய பின்னடைவை சந்தித்துள்ளது.

கடந்த 2020 இல் நடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் 75 தொகுதிகளில் வெற்றி பெற்று மாநிலத்தின் மிகப் பெரிய அரசியல் சக்தியாக திகழ்ந்த அந்த கட்சி, இந்த தேர்தலில் 25 தொகுதிகளில் மட்டுமே வெற்றி பெற்றது.

அக்கட்சி வழிநடத்திய மகா கூட்டணி மொத்தம் 35 தொகுதிகளில் மட்டுமே வெற்றி பெற்றது. முன் எப்போதும் இல்லாத வகையில், தேசிய ஜனநாயகக் கூட்டணி மொத்தமுள்ள 243 தொகுதிகளில் 202 தொகுதிகளில் வெற்றி பெற்று வரலாற்றுச் சாதனையை படைத்துள்ளது.

இந்த தேர்தல் முடிவு, ராஷ்ட்ரிய ஜனதா தொண்டர்களை மிகவும் சோர்வடையச் செய்துள்ள நிலையில், அக்கட்சியின் முதல் குடும்பத்திலும் பிரச்சினை வெடித்துள்ளது.

லாலு பிரசாத் யாதவின் மகளும் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ராஷ்ட்ரிய ஜனதா தளம் சார்பில் போட்டியிட்டு தோல்வி அடைந்தவருமான ரோகிணி ஆச்சார்யா, கட்சியில் மிகவும் முக்கியமானவராகக் கருதப்பட்டு வந்தார். இந்த தேர்தலின்போது அவர் தீவிர பிரச்சாரத்திலும் ஈடுபட்டார்.

இந்நிலையில், கட்சியில் இருந்தும், தனது குடும்பத்தில் இருந்தும் விலகுவதாக ரோகிணி ஆச்சார்யா அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "நான் அரசியலைவிட்டு வெளியேறுகிறேன். மேலும், எனது குடும்பத்தில் இருந்தும் விலகுகிறேன். சஞ்சய் யாதவும், ரமீஸும் இதைத்தான் என்னிடம் கேட்டார்கள். எல்லா பழிகளையும் நான் ஏற்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

ராஷ்ட்ரிய ஜனதா தளத்தின் மாநிலங்களவை உறுப்பினரான சஞ்சய் யாதவ், தேஜஸ்வி யாதவின் நம்பிக்கைக்குரியவராக கருதப்படுகிறார். உத்தரப் பிரதேசத்தில் உள்ள ஒரு அரசியல் குடும்பத்தைச் சேர்ந்த ரமீஸ், தேஜஸ்வி யாதவின் நீண்டகால நண்பராக இருந்து வருகிறார். எனினும், இவர்கள் என்ன சொன்னார்கள் என்பது குறித்து ரோகிணி விரிவாக தெரிவிக்கவில்லை. அதேநேரத்தில், இவ்விருவரும் இதுவரை விளக்கம் எதுவும் அளிக்கவில்லை.

லாலு பிரசாத் யாதவின் இரண்டாவது மகளான ரோகிணி ஆச்சார்யா, எம்.பி.பி.எஸ். பட்டம் பெற்று மருத்துவராக உள்ளார். லாலு பிரசாத் யாதவின் நெருங்கிய நண்பரான ராய் ரன்விஜய் என்பவரின் மகனான சாம்ரேஷ் சிங் என்பவருக்கும் இவருக்கும் கடந்த 2022 இல் திருமணம் ஆனது. ஆச்சார்யாவின் கணவர் ஒரு மென்பொருள் பொறியாளர். 20 ஆண்டுகளாக அமெரிக்கா மற்றும் சிங்கப்பூரில் வாழும் ரோஹிணி, அவர்களுக்கு இரண்டு மகன்கள் இருக்கின்றனர்.

லாலு பிரசாத் யாதவ், உடல் நலம் குன்றி மருத்துவமனையில் இருந்தபோது அவரை கவனித்துக் கொண்டவர் ரோகிணி. மேலும் தந்தை லாலுவுக்கு சிறுநீரகத்தை தானமாக அளித்து தனது பாசத்தைக் காட்டி மக்களிடையே பெரும் பாராட்டைப் பெற்றவர்.



# வெளிநாட்டு மாணவர் கல்வி கட்டணத்தின் மீது புதிய வரி விதித்தது பிரித்தானியா அரசாங்கம்

## துணைவேந்தர் அதிருப்தி

வெளிநாட்டு மாணவர்களின் கல்விக் கட்டணத்தின் மீது விதிக்கப்படவுள்ள புதிய வரி தொடர்பில் பிரித்தானியாவின் முன்னணி பல்கலைக்கழகம் ஒன்றின் துணைவேந்தர் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

இது தவறான கொள்கை எனவும் கல்வித் துறையைப் பாதிக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் பிரித்தானியாவின் நீண்டகால நலன்களுக்கு உகந்தது அல்ல என்றும் துணைவேந்தர் விமர்சித்துள்ளார்.

அமெரிக்கப் பல்கலைக்கழகங்கள் நிர்வாகத் தாக்குதலுக்கு உள்ளாகும் நிலையில், சர்வதேச மாணவர்களுக்கான உலகளாவிய இலக்காகப் பிரித்தானியா மாறுவதற்கு ஒரு சிறந்த வாய்ப்பு என அவர் சுட்டிக்காட்டினார்.

6 சதவீத வரி விதிக்கப்பட்டால், இங்கிலாந்தில் உள்ள பல்கலைக்கழகங்களுக்கு ஆண்டுக்கு 600 மில்லியன் யூரோவுக்கும் அதிகமாக செலவாகும் என்றும், மான்செஸ்டர் பல்கலைக்கழகம் போன்ற முன்னணி நிறுவனங்கள் இதனால் குறிப்பாகப் பாதிக்கப்படும் என்றும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் செலவை ஈடுசெய்ய, இருக்கும் நிதியைக் கொண்டே சமாளிக்க வேண்டியிருக்கும் என்று அவர் தெரிவித்தார்.

பல பல்கலைக்கழகங்கள் நிதிச் சிக்கலில் தத்தளிக்கும் இந்த நேரத்தில், இது மிகவும் கடினமான சூழலை உருவாக்கும் என்று அவர் எச்சரித்தார்.

இந்த வரியின் மூலம் கிடைக்கும் வருமானம், ஏழை மாணவர்களுக்கான பராமரிப்பு மானியங்களை மீண்டும் வழங்குவதற்குப் பயன்படுத்தப்படும் என்று அரசாங்கம் கூறியுள்ளது.

பிரித்தானியாவின் உயர்கல்வித் துறை கடுமையான நிதிச் சிக்கல்களை எதிர்கொள்கிறது.

பணவீக்கம் காரணமாக உள்நாட்டு மாணவர்களின் கல்விக் கட்டண வருமானம் குறைந்ததால் ஏற்பட்ட பற்றாக்குறையைச் சமாளிக்க, பல்கலைக்கழகங்கள் அதிக கட்டணம் செலுத்தும் சர்வதேச மாணவர்களை நம்பி இருந்தன.

ஆனால், அண்மைய குடியேற்ற மற்றும் விசா மாற்றங்கள் காரணமாக 2023 ஆம் ஆண்டு முதல், வெளிநாட்டு மாணவர் சேர்க்கை வீழ்ச்சியடைந்துள்ளது.

# ஜப்பான் பயனத்தை தவிர்க்குமாறு சீனப் பிரஜைகளுக்கு எச்சரிக்கை



ஜப்பானுக்கு பயணம் செய்வதை தவிர்க்குமாறு சீனா தமது பிரஜைகளை எச்சரித்துள்ளது.

ஜப்பானின் புதிய பிரதமர் சானே தகைச்சி அண்மையில், தெரிவித்த கருத்துக்களால், இரு நாடுகளுக்கும் இடையே கருத்து முரண்பாடுகள் அதிகரித்துள்ள நிலையில், இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, சீனாவால், தைவான் தாக்கப்பட்டால், ஜப்பான் இராணுவத் தலையீட்டைப் பரிசீலிக்கும் என்று ஜப்பான் பிரதமர் சானே தகைச்சி கூறியிருந்தார்.

அவரின் இந்தக் கருத்து, சீனாவின் பெய்ஜிங்கிலிருந்து கடுமையான பதிலடியைத் தூண்டியுள்ளதுடன், இரு நாடுகளுக்கு இடையே பதற்றங்களை அதிகரித்துள்ளது.

இந்த நிலையில், மேற்படி இரண்டு நாடுகளும் பிராந்திய பயணத்தின் பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையை எதிர்கொள்ள தயாராகி வருவதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

# கொழும்பில் 50 கோடி ரூபா பெறுமதியான சொகுசு வீட்டில் வசிக்கும் பிரதி அமைச்சர்

## நாடாளுமன்றத்தில் சர்ச்சையைக் கிளப்பிய எதிரணி

அநுர அரசின் பிரதி அமைச்சர் ஒருவர் கொழும்பில் 50 கோடி ரூபா மதிப்புள்ள அடுக்குமாடி குடியிருப்பில் வசிக்கின்றார் என்றும், அதை அவருக்கு யார் நன்கொடையாக அளித்தார்கள் என்றும் எதிர்கட்சியினர் நாடாளுமன்றத்தில் நேற்று சனிக்கிழமை கேள்வி எழுப்பியுள்ளனர்.

வரவு - செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதத்தின் போது எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி ஆளும் கட்சியினர் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைத்து உரையாற்றுகையிலேயே மேற்படி கேள்வி எழுப்பியுள்ளார்.

இதன்போது அவர் மேலும் உரையாற்றுகையில்,

"நீதிமன்ற வழக்குகளுக்காக இந்தப் பிரதி அமைச்சரை ஜே.வி.பி. தக்க



வைத்துக் கொண்டுள்ளது.

இந்தப் பிரதி அமைச்சர் இந்த அடுக்குமாடி குடியிருப்பை எப்படி வாங்கினார்? அவருக்கு அடுக்குமாடி குடியிருப்பை யார் கொடுத்தார்கள்? அர்ஜுன் அலோசியஸ் அவருக்கு அடுக்குமாடி குடியிருப்பைக் கொடுத்தாரா? அல்லது அர்ஜுன் அலோசியஸ் போன்ற பணக்கார நண்பரிடமிருந்து வந்ததா?

இந்த அரசில் மற்றொரு உயர் அதிகாரி ஒருவர் அடிக்கடி கமிஷன் தேடுகின்றார்.

சட்டவிரோதமாகக் கொள்கலன்களை அகற்றுவதில் ஈடுபட்டுள்ள மற்றொரு அமைச்சர் இருக்கின்றார். கப்பல் போக்குவரத்து என்ற தலைப்பு அவரிடமிருந்து பறிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், அது அவரை நிரபராதியாக்காது.

ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் இனிப் பத்திர ஊழல், சர்க்கரை ஊழல் மற்றும் தேங்காய் எண்ணெய் ஊழல் பற்றிப் பேச முடியாது.

இதேவேளை, இந்த அரசில் உள்ள சில அமைச்சர்கள் சில பாதாள உலகக் குழு நபர்களைச் சார்ந்து இருக்கின்றனர். ஆனால், அவர்கள் சுதந்திரமாக நடமாட மற்றவர்கள் கைது செய்யப்படுகின்றனர்." - என்றார்.

## தெற்கில் பாடசாலைக்கு அருகில்

# 220 போதை மாத்திரைகளுடன் இளைஞர் ஒருவர் சிக்கினார்!

பாடசாலைக்கு அருகில் போதை மாத்திரைகளை விற்பனை செய்த இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹொரணை பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் ஹொரணை பிரதேசத்தில் வைத்து சந்தேகநபரான இளைஞர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் ஹொரணை பிரதேசத்தில் வசிக்கும் 25 வயதுடைய இளைஞர்ஆவார்.

சந்தேகநபரான இளைஞரிடமிருந்து 220 போதை மாத்திரைகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் ஹொரணை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# இந்த வருடம் இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் அதிகரிப்பு

## இதுவரை 19 இலட்சத்து 72 ஆயிரத்து 957 பேர் வருகை

இவ்வருடத்தில் ஜனவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து நவம்பர் மாதம் 12 ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குள் 19 இலட்சத்து 72 ஆயிரத்து 957 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர் என்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை அறிவித்துள்ளது.

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள நிலையில் அவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 43 ஆயிரத்து 622 ஆகும்.

அத்துடன், ஐக்கிய இராச்சியத்திலிருந்து ஒரு இலட்சத்து 80 ஆயிரத்து 592 சுற்றுலாப் பயணிகளும், ரஷ்யாவிலிருந்து ஒரு இலட்சத்து 44 ஆயிரத்து 308 சுற்றுலாப் பயணிகளும், சீனாவிலிருந்து ஒரு இலட்சத்து 15 ஆயிரத்து 400 சுற்றுலாப் பயணிகளும், ஜேர்மனியிலிருந்து ஒரு இலட்சத்து 23 ஆயிரத்து 53 சுற்றுலாப் பயணிகளும், பிரான்ஸிலிருந்து 96 ஆயிரத்து 818 சுற்றுலாப் பயணிகளும், ஆஸ்திரே



லியாவிலிருந்து 88 ஆயிரத்து 616 சுற்றுலாப் பயணிகளும் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

அதன்படி, இந்த வருடத்தின் நவம்பர் மாதத்தின் முதல் 12 நாட்களில் 82 ஆயிரத்து 270 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர் என்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது.





# மாவா, போதை மாத்திரைகளுடன் யாழில் சந்தேகநபர் ஒருவர் கைது

**(பூ.லின்ரன்)**

யாழ்ப்பாணத்தில் கஞ்சா கலந்த மாவா மற்றும் போதை மாத்திரைகள் ஆகியவற்றுடன் சந்தேகநபர் ஒருவர் நேற்றையதினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொட்டடி – கண்ணாபுரம் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின. போது 2 கிலோ 790 கிராம் எடையுடைய கஞ்சா கலந்த மாவாவும், 50 போதை மாத்திரைகளும் கைப்பற்றப்பட்டன.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், யாழ்ப்பாணம் பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு பொலிஸாரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

விசாரணைகளின் பின்னர் அவரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

---

# அநுர அரசாங்கத்துடன் இணைந்து பதவிகள் பெறும் நோக்கம் இல்லை

## பீல்ட் மார்ஷல் பொன்சேகா பகிரங்கம்

நான், அநுர அரசாங்கத்துடன் இணைந்து ஒருபோதும் பதவிகளைப் பெற்றுக்கொள்ள மாட்டேன். எனினும், ஊழல் ஒழிப்பு நடவடிக்கைக்கு எனது ஆதரவு வழங்கப்படும்.

– இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

இந்த நாட்டை நாசமாக்கியதற்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்களே எதிர்வரும் 21 ஆம் திகதி நுகேகொடையில் ஒன்றுகூடுகின்றனர். இந்தத் தரப்பை நம்புவதற்கு நாட்டு மக்கள் தயாரில்லை.



இந்த நாட்டை மேற்படி தரப்பினரே மாறி, மாறி ஆட்சி செய்தனர். அந்தக் காலப் பகுதியில் இவர்களால் நாட்டைக் கட்டியெழுப்ப முடியவில்லை. இவர்கள் இனி என்ன செய்யப் போகின்றனர் – என்றும் சரத் பொன்சேகா கேள்வி எழுப்பினார்.

---

# மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ரூ. 2,500 நாள் சம்பளம் வழங்கினாலும் போதாது!

## அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு

மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்குத் தற்போது வழங்கப்படுகின்ற நாள் சம்பளம் போதாது என்று அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு தனியார் வானொலியொன்றின் அரசியல் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அவர் இதனைக் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாள் சம்பளமாக 2,500 ரூபா வழங்கப்பட்டாலும் அது போதாது.

மலையக மக்கள் அனைத்து



வழிகளிலுமே முடக்கப்பட்ட மக்களாகவே வாழ்ந்து வருகின்றனர்.

எமது ஆட்சியில் மலையக மக்களுக்கு விடிவு கிடைக்கும்.” – என்றார்.





# “மாகாண சபை முறைமையும் அதிகாரப் பகிர்வும்” சங்குக் கூட்டு ஏற்பாட்டில் மன்னாரில் கருத்தமர்வு

**(மன்னார் நிருபர்)**

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி (சங்குச் சின்னக் கூட்டணி) ஏற்பாடு செய்த “மாகாண சபை முறைமையும் அதிகாரப் பகிர்வும்“ எனும் தொனிப்பொருளில் கருத்தரங்கு நேற்று சனிக்கிழமை காலை 10 மணி முதல் பிற்பகல் 2.30 மணி வரை மன்னார் நகர மண்டபத்தில் இடம் பெற்றது.

முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் ஏ.ரி.லுஸ்ரின் தற்குரூஸ் தலைமையில் இந்த கருத்தமர்வு இடம் பெற்றது.

இதன் போது “மாகாணத்திற்கு பகிரப் பட்ட அதிகாரங்கள் – கல்வி – ஒரு சிறப்புப் பார்வை“ எனும் கருப்பொருளில் வடமாகாண முன்னாள் கல்வி அமைச்சர் கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன், “நிலையான தீர்வை எட்டுவதற்கான படிக்கல்லாக மாகாண சபை“ எனும் கருப்பொருளில் யாழ் பல்கலைக்கழக சட்டத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி கோசலை மதன், “மாகாண சபையும்,வரலாற்று தருணங்களும்“ எனும் கருப்பொருளில் எழுத்தாளர் கருணாகரன் மற்றும் “உள்ளூராட்சிகள் மீதான மாகாண சபையின் அதிகாரங்களும்,வரையறைகளும்“ எனும் கருப்பொருளில் சட்டத்தரணி சவிரியப்பு டலிமா சந்திரபோஸ் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

இந்தக் கருத்தமர்வின் தொகுப்புரையை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் வழங்கினார்.

அதனைத்தொடர்ந்து கருத்தமர்வில் கலந்து கொண்டவர்கள் கருத்தாளர்களின் கருத்துக்களில் ஏற்பட்ட சந்தேகங்களை கேள்விகளாக முன் வைத்தனர். உரிய பதில்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் அங்கத்துவக் கட்சி பிரதிநிதிகள், முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றத் தவிசாளர்கள், உறுப்பினர்கள், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மன்னார் கிளை பிரதிநிதிகள், சட்டத்தரணிகள். கிராம மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள், பல்கலைக்கழக மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

























# கண்கள் திறந்த விநாயகர் சிலை வவுனியாவில் நடந்த அதிசயம்!

**(கி.வசந்தன்)**

வவுனியா, தோணிக்கல் பகுதியிலுள்ள ஆலடிப் பிள்ளையார் கோவிலில் பிள்ளையார் சிலை இரு கண்களும் திறந்து காட்சியளித்தது என வெளியாகியுள்ள தகவல் பக்தர்களிடையே ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

வவுனியா தோணிக்கல் பகுதியில் அமைந்துள்ள பிள்ளையார் ஆலயத்தில் அமைத்துள்ள பிள்ளையார் சிலையின் கண்கள் மூடிய நிலையிலே காணப்பட்டது. நேற்று முன்தினம் மாலை சிலையின் கண்கள் திடீரென திறந்து தோற்றமளித்துள்ளது என்று கூறப்படுகின்றது.

பக்தர் ஒருவர் வழிபடச் சென்ற போது அந்தப் பிள்ளையார் சிலையில் ஒரு கண் திறந்து இருந்துள்ளது. அதன் பின் இரு கண்களும் திறந்த நிலையில், பிள்ளையார் காட்சி கொடுத்துள்ளார். அவர் அதனை ஏனையவர்களுக்குத் தெரிவித்த நிலையில் பலரும் அந்த அதிசயத்தைப் பார்க்கச் சென்றனர். சிறிது நேரம் திறந்து இருந்த கண்கள் பின்னர் வழமையான நிலைக்குச் சென்றுள்ளது என்றும் கூறப்படுகின்றது

இந்நிலையில் இந்த விடயம் சுற்றியுள்ளவர்களிற்கு பரவியது. இந்த அதிசயத்தைக் காணப் பொதுமக்கள் அதிகளவில் கோவிலை சூழ்ந்து பிள்ளையாரைப் பார்த்துச் செல்வதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.









# தமிழருக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி வேண்டும்!



## ஐக்கிய மக்கள் சக்தி திட்டவட்டம்

"இந்த நாட்டில் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுக்கு வரலாற்றில் இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் ஐக்கிய மக்கள் சக்தி உறுதியாக உள்ளது."

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பேச்சாளரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ்.எம். மரிக்கார் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அரசு சம்பள அதிகரிப்பு வழங்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி எதிர்ப்பு இல்லை. அதனை நாம் ஆதரிக்கின்றோம். அதேபோல் வடக்கு, கிழக்கு மக்களுக்கு வரலாற்றில் இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி அவசியம் என்ற நிலைப்பாட்டிலும் எமது கட்சி உறுதியாக உள்ளது.

வடக்கு, கிழக்கு மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு இந்த வரவு – செலவுத் திட்டத்தில் தீர்வு முன்வைக்கப்படவில்லை

ஜனாதிபதி இந்த வரவு – செலவுத் திட்டத்தை முன்வைக்கும் போது முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தனவின் பேரன் உரையாற்றுகின்றாரா என்று எனக்குத் தோன்றியது.

அரச நிறுவனங்களை மறுசீரமைக்க நாம் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை என்று குறிப்பிட்டு ஆட்சிக்கு வந்தவர்கள் அரச நிறுவனங்களைத் தனியார் மயப்படுத்தும் யோசனைகளை வரவு – செலவுத் திட்டத்தின் முன்வைத்துள்ளனர்." – என்றார்.

---





# மன்னார் தாழ்வுபாடு கடலில் இரு படகுகள் மோதி விபத்து

## காயமுற்ற மீனவர் ஒருவர் வைத்தியசாலையில்

(மன்னார் நிருபர்)

மன்னார் தாழ்வுபாடு மீன்பிடி துறையில் இருந்து நேற்று வெள்ளிக்கிழமை இரவு கடலில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர் ஒருவரின் படகும், கடலில் மீன் பிடித்து விட்டு கரை திரும்பிய மீனவர் ஒருவரின் படகும் மோதியமையில் இரு படகுகளும் கடும் சேதத்திற்கு உள்ளாகியுள்ளன.

இந்த விபத்து தாழ்வுபாடு கடற்கரையில் இருந்து சுமார் 150 மீற்றர் தொலைவில் இடம் பெற்றுள்ளது.

இந்தப் படகுகளில் ஒன்று கரை திரும்பியது. மற்றைய படகு கடலில் மூழ்கிய நிலையில், மீட்கப்பட்டு கரைக்கு கொண்டு வரப்பட்டது.

மேலும் மூழ்கிய படகில் பயணித்த மீனவர் ஒருவர் நேற்று சனிக்கிழமை காலை சிகிச்சைகளுக்காக மன்னார் வைத்தியசாலையில் சேர்க்கபட்டுள்ளார்.

இரு படகுகளின் உரிமையாளர்களும் விபத்துக் குறித்து மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர். மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

மேலும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றவர் தொழிலுக்குச் சென்ற மீன்பிடி படகின் வெளி இணைப்பு இயந்திரம் அவர்களின் மீன் வாடியில் வைக்கப்பட்ட நிலையில், மற்றைய படகின் மீனவர்கள் தமது படகு சேதமானதை தெரிவித்து, அந்த வாடியின் கததவை உடைத்து வெளியிணைப்பு இயந்திரத்தை எடுத்துச் சென்றனர் தெரிவிக்கப்படுகின்றது.





# கிழக்கு மாகாணப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையில் ஊழல் எனக் குற்றச்சாட்டு

(அபு அலா)

கிழக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் மற்றும் திட்டமிடல் பணிப்பாளர் ஆகியோர் பெரும் ஊழல் மோசடிகளில் ஈடுபடுகின்றமையுடன் முறையற்ற விதத்தில் போக்குவரத்து அனுமதிப் பத்திரங்களை வழங்குகின்றனர் எனத் தென்கிழக்கு கரையோரப் பிரதேச தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் செயலாளர் எம்.எஸ்.பைறூஸ் தெரிவித்தார்.

தென்கிழக்கு கரையோரப் பிரதேச தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று அட்டாளைச்சேனை லொயிஸ்ட் ஹோட்டலில் இடம்பெற்றது.

இதில் சங்கத்தின் தலைவர் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்களும் பங்கேற்றனர். இதன்போது, சங்கத்தின் செயலாளர் பைறூஸ் உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில் –

கடந்த பல வருடங்களாக கிழக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையில் பெரும் ஊழல், மோசடியில் பணிப்பாளர் நாயகம் மற்றும் திட்டமிடல் பணிப்பாளர் ஆகியோர் ஈடுபட்டு வருகின்றனர். இது விடயம் தொடர்பில் கிழக்கு மாகாண ஆளுநர் மற்றும் ஜனாதிபதி ஆகியோருக்கு பல கடிதங்களை அனுப்பி வைத்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

நாட்டில் நேர்மையான ஆட்சி இடம்




பெறவேண்டும் என்பதற்காக உழைத்து வருகின்ற ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க, இதற்குரிய சட்ட நடவடிக்கையை எடுக்க வேண்டுமென பகிரங்கமாக கேட்டுக்கொள்கின்றோம். அத்தோடு ஜனாதிபதியை சந்திப்பதற்கும் முயற்சி எடுத்து வருகின்றோம்.

கூடுதலான பயணிகள் இல்லாத இடங்களில் இலஞ்சத்தைப் பெற்றுக் கொண்டு மேலதிக பஸ்களுக்கு அனுமதிப் பத்திரங்களை வழங்குவது, தேவையில்லாத சந்தர்ப்பங்களில் அனுமதிப் பத்திரத்தை நீடித்துக்கொடுப்பது, திணைக்கள வாகனத்திற்காக இலட்சக்கணக்கான பணத்தை மோசடியாக செலவழித்திருப்பது, 16வருடங்களாக தொடர்ச்சியாக பணிப்பாளர் நாயகம் கதிரையில் அமர்ந்திருப்பது என்று பல குற்றச்சாட்டுக்கள் அவர் மீது முன்வைக்கப்பட்டுள்ளன.

கடந்த மூன்று வருடங்களில் வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை வாகனத்திற்கு எரிபொருள் செலவாக 43லட்சம்ரூபாசெலவழிக்கப்பட்டுள்ளதாக கணக்குக் காட்டப்பட்டுள்ளது. இதுவே மிகப்பெரும் மோசடியை நிருபித்துள்ளது.

கிழக்கு மாகாண ஆளுநரினால் நியமிக்கப்படுகின்றவரே போக்குவரத்து அதிகார சபைக்கு தவிசாளராக செயற்படுகின்றார். ஆனால், தவிசாளர் இந்த ஊழல், மோசடிக்கு நடவடிக்கை எடுக்காமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றமை பலத்த சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது. – எனவும்அவர்தெரிவித்தார்.

# வவுனியா தேசியக் கல்வியற் கல்லூரியில் ஆசிரிய மாணவர்களுக்கு திடீர் சுகவீனம்

## 40 பேர் வரையில் பாதிப்பு எனத் தகவல்

(வவுனியா நிருபர்)

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் கல்வி பயிலும் ஒரு பகுதி ஆசிரிய மாணவர்களுக்கு திடீர் சுகவீனம் ஏற்பட்ட நிலையில் 40 வரையிலான மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். சில மாணவர்கள் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அதிகாலை முதல் மாணவர்களுக்கு திடீர் காய்ச்சல் மற்றும் வாந்தி ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து 7 மாணவர்கள் வவுனியா பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர். சில மாணவர்கள் தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுள்ளனர். கல்லூரி நிர்வாகம் கூறியே தனியார் மருந்தகங்களுக்கு தாங்கள் சென்றனர் என மாணவர்கள் தெரிவித்தனர்.

சுகவீனமடைந்த சில மாணவர்கள் வீடுகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் சுகவீனம் தொடர்பாக மாணவர்களால் அவர்களின் பெற்றோர்களுக்கு தெரியப்படுத்தப் பட்டது. அவர்களை அழைத்துச் செல்வதற்காக நேற்றுக் காலை மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற வெளி மாவட்டங்களில் இருந்து பெற்றோர்கள் சிலர் வருகை தந்திருந்தனர்.

இருப்பினும், அவர்கள் கல்லூரி வளாகத்திற்குள் அனுமதிக்கப்படவில்லை. மூன்று மணி நேரமாக அவர்கள் பிரதான வாயிலில் காக்க வைக்கப்பட்டிருந்தனர். அதன் பின்னர் அவர்களாக உள்ளே சென்று உப பீடாதிபதியுடன் கலந்துரையாடினர்.

இதன்போது, பிள்ளைகளை தங்களுடன் அனுப்புமாறு பெற்றோர் கோரியிருந்தனர்.

காய்ச்சல் ஏற்பட்டதாக கூறும் மாணவர்கள் தமது சொந்த விடுமுறையில் வீடு செல்ல முடியும் என நிர்வாகத்தால் பெற்றோர்களுக்கு தெரிவிக்கப்பட்டதுடன் அவர்களிடம் கடிதம் பெறப்பட்ட பின்னர் பெற்றோர்களுடன் அனுப்பி வைக்கப்பட்டிருந்தனர்.

இவ் விடயம் தொடர்பாக கல்லூரியின் பீடாதிபதியிடம் கேட்டபோது –

சுகவீனமுற்ற மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு வைத்தியர்கள் பரிந்துரைத்தால் மாத்திரமே வீட்டிற்கு செல்ல அனுமதிக்க முடியும் என்றும், பெற்றோர்களின் கோரிக்கையின் பிரகாரம் அனுப்ப முடியாது என்றும் தெரிவித்தார். அனைத்து மாணவர்களுக்கும் விடுமுறை வழங்கினால் கல்விச் செயற்பாடுகள் பாதிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, கல்லூரியின் பீடாதிபதி பொறுப்பற்ற விதமாகச் செயற்படுகின்றார் எனவும், தமது பிள்ளைகளின் பாதுகாப்பே முக்கியம் எனவும் பாதிகாப்பட்ட ஆசிரிய மாணவர்களின் பெற்றோர் குற்றம் சாட்டியுள்ளனர்.



# மன்னாரில் காற்றாலை மின் திட்டத்திற்கு எதிரான போராட்டம் நேற்றுடன் முடிவுக்கு

**(மன்னார் நிருபர்)**

மன்னாரில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வந்த காற்றாலை மின் திட்டத்திற்கு எதிரான போராட்டம் 105 ஆவது நாளான நேற்றைய தினம் சனிக்கிழமை மாலையுடன் நிறைவுக்கு வந்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் மாக்கஸ் அடிகளார் நேற்றைய தினம் சனிக்கிழமை மாலை போராட்டக் களத்தில் விசேட ஊடக சந்திப்புக்கு ஏற்பாடு செய்தார்.

இதன் போது மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு எஸ்.ஞானப்பிரகாசம் ஆண்டகை கலந்து கொண்டமையோடு, போராட்ட களத்தில் அங்கம் வகித்தவர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்தார் அருட்தந்தை எஸ்.மாக்கஸ் அடிகளார் கூறியவை வருமாறு:-

மக்களின் வாழ்விடங் களையும், வாழ்வாதாரத்தையும்,இர்ய்ப்பையும் பாதிப்புக்கு உள்ளாக்கி வரும் காற்றாலை மற்றும் கணிய மண் அகழ்வுக்கு எதிரான போராட்டம் இன்றைய தினம் 105 ஆவது நாளை கடக்கின்றது.

ஜனாதிபதி அவர்களின் அமைச்சரவை அறிவிப்பை நாங்கள் சற்று பரிசோதனைக்கு உட்படுத்தினோம். அதற்கமைவாக 105 ஆவது நாளான இன்றைய தினம் சனிக்கிழமை மாலை எமது போராட்டத்தை நிறுத்திக் கொள்ளுகின்றோம். எமது போராட்டம் என்ன கோரிக்கைகளை முன் வைத்து முன்னெடுக்கப்பட்டதோ அந்த கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

எங்களுடைய முக்கியமான கோரிக்கை என்ன என்றால் மன்னார் மண்ணிலே கனிய மணல் அகழ்வுக்கான அனைத்து வித அனுமதிகளும் நிறுத்தப்பட வேண்டும்.மேலும் மன்னார் தீவில் அகழ்வு செய்யப்படுகின்ற மணல் தீவை விட்டு வெளியில் கொண்டு செல்லப்படுவது தவிர்க்க வேண்டும்.

கொண்டு செல்லப்படும் மண் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும். எனவே அரசாங்கம் கனிய மணல் அகழ்வுக்கு அனுமதி வழங்காது என்ற நம்பிக்கையுடனே இந்த போராட்டத்தை நிறுத்துகிறோம். வெகு விரைவில் அரசாங்கம் கனிய மணல் தொடர்பாக அமைச்சரவை அனுமதியை பெற்று தேசிய கொள்கையாக அதனை அறிவிப்பார்கள் என்பதை நம்புகின்றோம்.

எதிர்வரும் காலத்தில் எல்லா நடவடிக்கைகளையும் கண்காணித்துக் கொள்ளுவதற்காக எல்லா மக்களையும் உள்ளடக்கிய ஒரு கண்காணிப்புக் குழுவை அரச அதிபர் தலைமையில் உடனடியாக அமைத்து, அந்தக் குழுவினுடைய கண்காணிப்பின் கீழ் எல்லா விதமான செயல்பாடுகளையும் முன்னெடுப்பது சிறந்ததாக அமையும் என்பதை இப்போராட்ட குழு சார்பாக தெரிவித்துக் கொள்கிறோம். – எனத் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து மன்னார் மூர்வீதி ஜ/ம்மா பள்ளி பிரதம மௌலவி எம்.அஸீம் கருத்துக்களை தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து அருட்தந்தை எஸ்.மாக்கஸ் அடிகளார் தலைமையிலான குழுவினர் மன்னார் மாவட்ட செயலகத்திற்கு சென்று மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் இடம் தமது கோரிக்கை அடங்கிய மகஜரை கையளித்தனர்.

இதன் போது மன்னார் மறைமாவட்ட ஆயர், போராட்டக்குழு பிரதிநிதிகள், மன்னார் பிரஜைகள் குழுவின் உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.














# மாகாணசபைத் தேர்தல்கள் மட்டுமே தமிழருக்கு இன்று ஒரு சில உரிமைகளைப் பெற்றுத் தரும்!

## இப்படிக் கூறுகின்றார் நீதியரசர் விக்னேஸ்வரன்

"நாங்கள் ஒன்று சேர்ந்து கோராவிட்டால் மாகாணசபைகள் கைவிடப்படும் அபாயம் இருக்கின்றது. இப்போதுள்ள நிலையில் மாகாணசபைத் தேர்தல்கள் மட்டுமே தமிழர்களுக்கு ஒரு சில உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பன. அது இல்லாவிட்டால் சிங்களவரிடம் இருந்து கிடைக்கப்போவது மாகாணசபை முறைமையிலும் குறைந்த அதிகாரங்களைக் கொண்ட ஒரு முறைமையே ஆகும்"

- இவ்வாறு தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்திருக்கின்றார்.

மாகாணசபை பற்றிய கேள்வி பதில் அறிக்கை ஒன்றை அவர் நேற்று வெளியிட்டார். அதிலேயே அவர் இது பற்றிக் குறிப்பிட்டுள்ளார். அதன் முழு விவரம் வருமாறு:-

கேள்வி:- மாகாணசபை முறைமையை பெரும்பான்மை சிங்களவர்களும் தமிழர்களில் ஒரு சாராரும் எதிர்க்கின்றனர். 2018 இல் இருந்து மாகாணசபைத் தேர்தல்கள் நடத்தப்படவில்லை. 13 ஆவது திருத்தச் சட்டத்தை இலங்கை அரசியல் யாப்பில் உள்ளடக்க உதவி புரிந்த இந்தியாவும் அநேகமாக அது பற்றி தற்போது எதுவும் பேசுவதில்லை. மாகாணசபைத் தேர்தல்கள் வைக்கப்படாமலே போய்விடுவனவா? அத் தேர்தல்கள் நடைபெறுவதால் தமிழர்களுக்கு நன்மை பயக்குமா?

பதில்:- இந்தியாவில் தற்போது நடைபெறுவது காங்கிரஸ் ஆட்சி அல்ல. 13வது திருத்தச்சட்டம் காங்கிரஸார் ஆண்ட காலத்திலேயே இங்கு அமுலுக்கு வந்தது. இலங்கையின் தமிழ்க் கட்சிகள் குறித்த தேர்தல்கள் வேண்டும் என்று சேர்ந்து கோரிக்கை விடுக்காத போது நாம் ஏன் அது பற்றி அலட்டிக் கொள்ள வேண்டும் என்று பீ.ஜே.பி அரசாங்கம் வாளாதிருப்பதாகத் தெரிகிறது.

மாகாணசபைத் தேர்தல்கள் வேண்டுமா இல்லையா என்று முதலில் முடிவெடுக்க வேண்டியவர்கள் தமிழ்த் தேசியக் கட்சிகளே. அவர்களுள் ஒற்றுமை இல்லாத போது இந்தியா அது பற்றிப் பேசா திருப்பதை நாம் பிழையென்று கூறமுடியாது. எங்களுக்காக இந்தியா இறங்கி வந்தால்க் கூட 13 ஆவது திருத்தச் சட்டத்தையும் மாகாணசபை முறைமையையும் கரிச்சுக் கொட்ட எங்களுள் பலர் இருக்கின்றார்கள். அவர்கள் சீனர்களின் கட்டுப்பாட்டில் இருக்கின்றார்களோ நான் அறியேன். அதிகாரங்கள் இல்லாத மாகாணசபைகளை நிறுவத் தேர்தல்களைக் கொண்டு வர வேண்டும் என்று நீங்கள் ஏன் வலியுறுத்துகின்றீர்கள் என்று இந்தியாவைக் கேள்வி கேட்கக் கூடியவர்கள் எமது இலங்கைத் தமிழ்ப் பேசும் மக்களிடையே இருக்கத்தான் செய்கின்றார்கள். ஆனால் அவர்களின் இந்தக் குறுகிய பார்வை கொண்ட முடிவு இலங்கைத் தமிழ் மக்களின் வருங்காலத்தை வெகுவாகப் பாதிக்கப் போகின்றது. முதலில் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்று சேர்ந்து தற்போதைக்கு மாகாணசபைத் தேர்தல்கள் உடனே நடத்தப்பட வேண்டும் என்ற முடிவை எடுக்க வேண்டும்.

காரணம் - தற்போதைக்கு எமது இரு தமிழ்ப் பேசும் மாகாணங்களை, தமிழர் பாரம்பரியமாக வாழ்ந்து வரும் மாகாணங்களாக வலியுறுத்தும் சட்ட வலுவுள்ள ஒரே ஆவணம் 1987 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட இந்திய - இலங்கை உடன்படிக்கையாகும். குறித்த உடன்படிக்கையில் இலங்கையின் வடகிழக்கு மாகாணங்கள் பாரம்பரியமாக இலங்கையின் தமிழ்ப் பேசும் மக்கள் வாழ்ந்து வந்த இடங்கள் என்பதை இரு நாடுகளும் உத்தியோகபூர்வமாக ஏற்றுக் கொண்டுள்ளன.

அந்த அடிப்படையில் எமக்குரிய சிறப்பம்சத்தை வலியுறுத்தி தற்போதிருக்கும் அதிகாரங்களை விரிவடையச் செய்ய வேண்டும். நாம் எமது அரசியல் குறிக்கோள்களை நிர்ணயிப்பது ஒன்று. அதே நேரத்தில் மாறிவரும் அரசியல் சூழல்களின் மத்தியில் அவற்றை நாம் அடைவோமா என்று ஆராய்வது இன்னொன்று. எமது குறிக்கோள்களை நாம் நிர்ணயிப்பதில் தப்பெதுவும் இல்லை. ஆனால் கையில் ஒன்று காட்டில் இரண்டுக்கு சமம் என்பதை நாம் மறக்கக் கூடாது. எமது கையில் இருப்பது மாகாணசபை முறைமை, காட்டில் இருப்பது எமது அரசியல் குறிக்கோள்கள்!

இன ரீதியாக இந்த நாட்டை ஆள நினைக்கும் ஒரு மனித அலகு தமது அதிகாரத்தைக் குறைக்கும் அளவுக்கு நடந்து கொள்வார்களா என்று நாம் சிந்திக்க வேண்டும். காத்திராப் பிரகாரமாக இந்திய - இலங்கை உடன்பாடு 1987 ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்டது. அப்படி இருந்தும் அந்த உடன்பாட்டில் காணப்பட்ட வடகிழக்கு இணைப்பை ஜே.வீ.பி. உச்ச நீதிமன்றமூடாக இல்லாதாக்கியது. தரப்பட்ட சொற்ப காணி, பொலிஸ் அதிகாரங்கள் எம்மை வந்தடையாமல் தொடர்ந்து வந்த அரசாங்கங்களால் தடைசெய்யப்பட்டன. வடகிழக்கு மாகாணங்களுக்கென தீர்மானிக்கப்பட்ட மாகாணசபை முறைமை மற்றைய 7 மாகாணங்களுக்கும் ஏற்புடையதாக மாற்றப்பட்டது. ஆகவே இனி ஒரு சாதகமான அரசியல் யாப்பு சிங்களத் தலைவர்களிடம் இருந்து எமக்குக் கிடைக்கும் என்று நாம் எதிர்பார்ப்பது முட்டாள்தனம். சிலர் அமெரிக்கா எமக்குப் பெற்றுத்தரும், சீனா பெற்றுத் தரும் என்று கனவு காண்கின்றார்கள். நவீன இந்தியா இதற்கு இடமளிக்குமா என்று இவர்கள் சிந்திப்பதில்லை.

இருப்பதை நாம் கையேற்று அரசியல் ரீதியாக முன்னேற எத்தனிக்க வேண்டும். மாகாணசபைகள் கலைக்கப்பட்டு ஏழு வருடங்கள் ஆகிவிட்டன. ஒரு ஜனநாயக நாடு

தொடர்ச்சி▼

# மாகாணசபைத் தேர்தல்கள் மட்டுமே தமிழருக்கு இன்று ஒரு சில உரிமைகளைப் பெற்றுத் தரும்!

தொடர்ச்சி▲

எனப்படும் இந்த நாட்டில், மாகாணசபைத் தேர்தல் முறைமை எவ்வாறு அமைய வேண்டும் என்ற கேள்வியை எழுப்பி, தேர்தல்கள் ஏழு வருடங்கள் தள்ளி வைக்கப்பட்டுள்ளன. இதே போன்று நாடாளுமன்றத் தேர்தலை வேளைக்கு நடத்தாது காலம் தாழ்த்த சிங்கள மக்கள் இடம் அளிப்பார்களா?

ஆனால் மாகாணசபைத் தேர்தல்கள் பற்றி சிங்கள மக்கள் பொறுமை காக்கின்றார்கள் என்றால் அவர்களுக்கு மாகாணசபைகள் தேவையற்ற ஒரு முறைமை என்பதே காரணம். வட கிழக்கு மாகாணங்களுக்கென தயாரிக்கப்பட்ட மாகாணசபை முறைமை ஜே.ஆர்.ஜயவர்தனாவின் விருப்பத்தின் பேரில் மற்றைய ஏழு மாகாணங்களுக்கும் ஏற்புடையதாக சட்டம் மாற்றி தயாரிக்கப்பட்டது. இப்பொழுது கூட எமது தமிழ்த் தலைவர்கள் மாகாணசபைத் தேர்தல்கள் வேண்டும் என்று முடிவெடுத்தால் நாங்கள் அரசாங்கத்திடம் வட கிழக்கு மாகாணசபைத் தேர்தல்களை மட்டும் முதலில் வைக்குமாறு கேட்கலாம். சிங்கள மக்களின் மனோநிலையில் தமக்குப் பாதகமாக எந்தவித மாற்றங்களும் ஏற்படவில்லை என்ற விம்பத்தை ஏற்படுத்த வடகிழக்கு மாகாணசபைத் தேர்தல்களை மட்டும் தற்போதைக்கு நடத்த அரசாங்கம் முன்வரலாம். ஆகவே நாம் கேட்காமல் இருந்தால் மாகாணசபைத் தேர்தல்கள் தொடர்ந்து வைக்கப்படாமலே இருக்க வாய்ப்புண்டு.

உங்கள் இரண்டாவது கேள்வி பற்றி இதுவரையில் நான் கூறியவற்றில் இருந்து எனது பதிலை உயர்த்துணர்ந்திருப்பீர்கள்.

அதாவது மாகாணசபைத் தேர்தல்கள் நடைபெற்று எமது தனித்துவம் வலியுறுத்தப்படாவிட்டால் நாம் சிங்கள மேலாதிக்கத்தின் கீழ் தொடர்ந்திருக்க நேரிடும். காலக்கிரமத்தில் எமது தனித்துவம் அழிந்து போய்விடும்.

அதெப்படி என்று கேட்பீர்கள்!

நடந்த சில வரலாற்றுச் சம்பவங்களைக் கூறுகின்றேன். சுமார் 400 ஆண்டுகளுக்கு முன்னர் Don Juan Dharmapala என்ற சிங்கள அரச னுக்கு முடிசூட்டு விழா நடாத்த தகைமையுடைய பிராமணர்கள் இங்கு இருக்கவில்லை. இதன் காரணத்தால் தகுதி பெற்ற இளம் பிராமணர்கள் மதுரையில் இருந்து இங்கு வருவிக்கப்பட்டார்கள். அவர்கள் முடிசூட்டு விழாவை நடத்திய பின்னர் அரசன் அவர்க ளுக்கு அம்பலாங்கொட - பலபிற் றிய போன்ற தற்போதைய நகரங்களை ஒட்டிய காணிகளை கறுவா பயிரிடத் தருவதாகக் கூறி அவர்களை இங்கு வசிக்குமாறு கேட்டுக் கொண்டார். அக் காலத்தில் மதுரைக்கு இங்கு தங்கியிருந்து செல்வதென்றால் 7,8 மாதங்கள் செல்வன. பலர் இங்கிருந்த சிங்களப் பெண்களை மணம் முடித்து சிங்களவருடன் ஐக்கியமாகிவிட்டார்கள். அவர்களுக்கென்று ஒரு சாதிப் பெயரும் சூட்டப்பட்டது. அவர்களை 'சலாகம' சாதியினர் என்று இன்று அழைப்பார்கள். மதுரைப் பிராமணர்களின் வாரிசுகள் இன்று சிங்களவர்கள். அவர்களின் பாரம்பரிய பெயர்கள் 'முனி' என்ற விகுதியைக் கொண்டிருப்பன. நம்முனி, விஜயமுனி, வீரமுனி, வெற்றிமுனி என்பன இப்பொழுதும் அவர்கள் பெயர்களில் அமைந்திருப்பதை நாம் காணலாம்.

நீர்கொழும்பில் இருந்து மன்னார் வரையான கரையோரப் பகுதிகளில் என்னுடைய இளம்பிராயத்தில் அதாவது சுமார் 80 வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்தவர்கள் கத்தோலிக்கத் தமிழர்களும் இந்துக்களும். நாம் முன்னேஸ்வரம் சென்ற போது அங்கு வந்த பலரும் திருநீறும் சந்தனமும் அணிந்திருந்தார்கள். அவர்கள் சிலாபத்தை ஒட்டி வாழ்ந்த இந்துத் தமிழர்கள்.

கடந்த 100 ஆண்டுகளில் ஒரு கத்தோலிக்க பாதிரியாரின் சிபார்சின் பேரில் தமிழ் கத்தோலிக்கர்கள் சிங்கள கத்தோலிக்கர்கள் ஆனார்கள். உதாரணத்துக்கு பர்ணாண்டோ என்ற போர்த்துக்கேயப் பெயரைக் கொண்டிருந்த தமிழ்ப் பேசும் கத்தோலிக்க மக்கள் சிங்களம்பேசும்பர்ணாண்டோக்கள் ஆனார்கள். இதற்கு ஆதாரம் நூறு வருடங்களுக்கு முன்னர் எழுதப்பட்ட காணி உறுதிகள். அவை அனைத்தும் தமிழிலேயே காணப்படுகின்றன. ஆகவே தமிழர்கள் சிங்களவர்கள் ஆகிவிட்டனர் குறித்த கரையோரப் பகுதிகளில்!

அநுராதபுரத்தில் வாழ்ந்த தமிழர்கள் பலர் இன்று சிங்களவர்கள் ஆகிவிட்டார்கள். எனது சிறுவயதில் அனுராதபுர பழைய நகரத்தில் பெருவாரியாகத் தமிழர்கள் வாழ்ந்தார்கள். இன்று அவர்கள் இல்லை.

மலையகத்தில் இருந்து வத்தளை, நீர்கொழும்பு பகுதிகளுக்கு புலம் பெயர்ந்து சென்ற தமிழர்கள் பலர் இன்று சிங்களவர்கள் ஆகிவிட்டனர். இதே நிலை வட கிழக்கு மாகாணங்களுக்கு நடைபெறாது என்பது என்ன நிச்சயம்? சிங்களக் கட்சியொன்று வடகிழக்கில் தேர்தல்களில் வெல்ல முடியாது என்று இறுமாப்புடன் சொன்ன எங்களுக்கு அண்மையில் நடந்த கதி என்ன? ஆகவே இருப்பதைக் கைவசம் வைத்து எமது உரிமைகளை விரிவுபடுத்திச் செல்வதே எமக்கிருக்கும் ஒரேயொரு வாய்ப்பு!

எனவே உங்கள் கேள்விக்குப் பதில் (1) நாங்கள் சேர்ந்து கோராவிட்டால் மாகாணசபைகள் கைவிடப்படும் அபாயம் இருக்கின்றது. (2) இப்போதுள்ள நிலையில் மாகாணசபைத் தேர்தல்கள் மட்டுமே தமிழர்களுக்கு ஒரு சில உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பன. அது இல்லாவிட்டால் சிங்களவரிடம் இருந்து கிடைக்கப்போவது மாகாணசபை முறைமையிலும் குறைந்த அதிகாரங்களைக் கொண்ட ஒரு முறைமையே. - என்று தெரிவித்தார்.

---

# வடக்கு சிரேஷ்ட டி.ஐ.ஜியாக புத்திக்க சிறிவர்தன நியமனம்



(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபராக ஜி.எம்.எச்.புத்திக்க சிறிவர்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தீர்மானத்திற்கு அமைய, சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் பலருக்கு இடமாற்றங்கள் மற்றும் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதனடிப்படையில் இந்த நியமனமும் வழங்கப்பட்டது.

வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக இருந்த திலக் தனபால வட மத்திய மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் தலைமையகம் மற்றும் வட மத்திய மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பதவிகளில் இருந்த ஜி.எம்.எச்.புத்திக்க சிறிவர்தன வடக்கு மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள்- 16.11.2025




உங்கள் முயற்சிகளில் நீங்கள் விரும்பும் பலன் கிடைக்கும். இன்று எதிர்பாராத சில நன்மைகள் உங்களுக்கு மகிழ்ச்சியை தரும்.

இன்று நீங்கள் விரைவாகப் பணியாற்றுவீர்கள்.அதையும் எளிதாக ஆற்றுவீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான தருணங்களை கழிப்பீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

பணப்புழக்கம் அதிகமாக காணப்படும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும்.

இன்று ஆற்றலுடனும் ஆரோக்கியத்துடனும் காணப்படுவீர்கள்.




இன்று தன்னம்பிக்கை குறைந்து காணப்படும். நம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டியது அவசியம். மனதில் குழப்பம் இருக்கும் என்பதால் முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணியில் நீங்கள் எதிர்பார்த்த பலன்கள் கிடைக்காது. உங்கள் பணிகளை திட்டமிட்டு ஆற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். அமைதியைப் பராமரிக்க வேண்டும்.

செலவுகள் அதிகரிக்கும் என்பதால் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும். தேவையற்ற செலவுகள் ஏற்படும்.

சளி, இருமல் அல்லது தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் ஆரோக்கியத்தைக் கவனமாகப் பார்த்துக் கொள்ளவும்.




உங்கள் முன்னேற்றத்துக்கான முயற்சிகளை எடுப்பீர்கள். உங்கள் லட்சியங்களை அடைய நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டும். வாழ்வில் வரும் மாற்றங்களை நடைமுறைப்படுத்த தைரியமாக இருங்கள்.

உங்களது தற்போதைய பணியில் திருப்தியின்மை காணப்படும். மேலும் உங்கள் வளர்ச்சிக்காக பணி மாற்றம் விரும்புவீர்கள்.

உறவில் புரிந்துணர்வை பராமரிக்க உங்கள் துணையை அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று குறைந்த அளவு பண வரவே காணப்படும். அதிக பொறுப்புகள் காரணமாக அதிகமாக செலவு செய்ய நேரும்.

கண் சம்பந்தமான பிரச்சினைகள் காணப்படும். உங்களை நன்கு கவனித்துக் கொள்ளுங்கள்.




இன்று வாய்ப்புகள் நிறைந்து காணப்படும். என்றாலும் முடிவெடுக்கும் போது நீங்கள் கவனமாக இருக்க வேண்டும்.

நீங்கள் எளிதாக பணியாற்றுவீர்கள். பணியிடத்தில் உங்கள் திறனுக்கான அங்கீகாரம் கிடைக்கப்பெறுவீர்கள். ஊக்கத்தொகையாக பண வரவு அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை ஒன்றாக இணைந்து பகிர்ந்து மகிழ்வீர்கள்.

இன்று பண வரவு திருப்திகரமாகவும் போதுமானதாகவும் இருக்கும்.

பெரிய அளவிலான ஆரோக்கியப் பிரச்சினை ஏதும் காணப்படாது.




தகவல் பரிமாற்றங்களை கவனமாகக் கையாள வேண்டும். யதார்த்தமாக இருக்க வேண்டியது அவசியம். பொறுமையைக் கையாள வேண்டும்.

சில பணிகள் குறித்தநேரத்தில் முடியாது. உங்கள் நேரத்தை பயனுள்ளதாக ஆக்க திறமை தேவை.

நீங்கள் உணர்ச்சிவயப்பட்டு அந்த உணர்வை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் அமைதியின்மை ஏற்படும்.

நிதிநிலைமை அதிர்ஷ்டகரமாக இருக்காது. அதிக செலவினங்கள் காணப்படும்.

பல் வலிக்கான சாத்தியம் உள்ளது. உங்கள் ஆரோக்கியத்தை கவனித்துக்கொள்ள வேண்டும்.




தவறுகள் செய்ய வாய்ப்புள்ளதால் பணியில் அதிக கவனம் தேவை. பொறுப்புக்களின் காரணமாக இன்று பணிகளில் மும்மரமாக இருப்பீர்கள்.

உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உறவில் நட்பான அணுகுமுறை சிறந்தது.

செலவுகள் அதிகமாக இருக்கும். நிதிநிலையில் சமநிலையைப் பராமரிப்பது இன்று கடினமாக உணர்வீர்கள்.

சளி அல்லது இருமல் பாதிப்புகள் ஏற்படலாம். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.




ங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும். உயர்ந்த இலட்சியத்தைக் கொள்ள வேண்டும்.

உங்கள் திறமைக்கு மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்காது. இது உங்களை பாதிக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள். சிறந்த முறையில் பணியாற்றுங்கள்.

உங்கள் துணையுடன் சூடான விவாதங்கள் நடக்க வாய்ப்புள்ளது. நீங்கள் இருவரும் மற்றவர்களின் தேவையை புரிந்து கொள்ள வேண்டும்.

இன்று நிதி வளர்ச்சி காணப்படாது. செலவுகள் அதிகமாக காணப்படும்.

கால் வலியால் அவதிப்படுவீர்கள். முறையான உடற்பயிற்சி உங்கள் ஆரோக்கியத்துக்கு நல்லது.




தைரியத்துடனும் உறுதியுடனும் முன்னேறுவீர்கள். இன்று முக்கியமான முடிவுகளை எடுப்பதற்கு உகந்த நாள்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளை நிரூபிக்க போதுமான வாய்ப்புகள் காணப்படும். உங்களுக்கு கொடுத்த வேலையை குறித்தநேரத்திற்குள் முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையாகப் பேசுவீர்கள். இதனால் மகிழ்ச்சி நிறைந்திருக்கும்.

நிதிநிலைமை இன்று சிறப்பாக இருப்பதன் காரணமாக உங்களின் சேமிப்பதற்கான வாய்ப்பு அதிகரிக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள்- 16.11.2025




இன்று அனுகூலமான நாள். நீங்கள் விரைந்து செயலாற்றுவீர்கள். இன்று அதிர்ஷ்டம் காணப்படும்.

உங்கள் கீழ் பணிபுரிபவர்களின் ஒத்துழைப்பையும் ஆதரவையும் பெறுவீர்கள். உங்கள் திறமை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள். இருவருக்குமிடையே மகிழ்ச்சி காணப்படும்.

உங்கள் நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும்.

இன்று ஆரோக்கியம் தடையாக இருக்காது.




இன்று அதிர்ஷ்டகரமான நாளாக இருக்காது. என்றாலும் உங்கள் கடின முயற்சி மூலம் உங்கள் திறமைகளை நிரூபிக்கலாம். தடைகளைக் கண்டு லட்சியத்திலிருந்து விலகாதீர்கள்.

பணியில் தவறுகள் நேரலாம். இதனால் உங்கள் மேலதிகாரிகளின் அதிருப்திக்கு ஆளாகலாம். சிறிது கவனமுடன் இருக்கவும்.

உங்கள் துணையுடன் கடுமையாகப் பேசுவீர்கள் அல்லது வன்மையுடன் நடந்து கொள்வீர்கள். இது உங்கள் மகிழ்ச்சியை கெடுக்கும்.எனவே இதனை தவிர்த்தல் வேண்டும்.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். நிதிநிலைமையில் ஸ்திரத்தன்மை பராமரிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

செரிமானம் சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளது. அதிக நீரைப் பருகவும்.




சிக்கல்களில் சிக்காமல் இருக்க இன்று உங்கள் செயல்களில் பொறுமை தேவை.இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள் அல்ல.

உங்கள் சக பணியாளர்களுடன் சில பிரச்சினைகள் ஏற்படும். இதனால் உங்கள் பொறுப்புகளை நிறைவேற்றுவதில் தடைகள் இருக்கும்.

உங்கள் துணையுடன் தொடர்பு கொள்கையில் கவனம் தேவை. எரிச்சலூட்டும் நடத்தை அல்லது கடுமையான வார்த்தைகள் உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

நிதி சம்பந்தமான முக்கிய முடிவுகள் தவிர்ப்பது நல்லது. இல்லையெனில் நஷ்டம் ஏற்பட வாய்ப்புள்ளது.

அதிக உடல் உழைப்பின் காரணமாக கால் வலி ஏற்படலாம். உடல் நலத்தில் கவனம் செலுத்தவும்.




இன்றைய நாளின் விளைவுகள் உங்களுக்கு சாதகமாக அமையும். இன்று நீங்கள் முக்கிய முடிவுகள் எடுக்கலாம்.

உங்கள் பணியில் திருப்தி கிடைக்கும். சகபணியாளர்களும் தரவாக இருப்பார்கள்.

உங்கள் துணையிடம் அன்பாக நடந்து கொள்வர்கள். இதனால் உறவின் பிணைப்பு வலுப்படும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். இன்று வரும் வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

இன்று பொதுவாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# மாவட்டச் செயலக நடமாடும் சேவைக்கு தனியார் தரப்பிடமிருந்தும் நிதி அறவீடு!



யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் மற்றும் சாவகச்சேரி பிரதேச செயலகம் இணைந்து நடாத்தும்

நடமாடும் சேவை

திகதி : 04.11.2025 (செவ்வாய்க்கிழமை)
இடம் : பிரதேச செயலகம், சாவகச்சேரி
நேரம் : மு.ப 8.30 - பி.ப 3.00

பெற்றுக்கொள்ளக்கூடிய சேவைகள்

- ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களத்தினால் வழங்கப்படும் சேவைகள் (தேசிய அடையாள அட்டை)
- ஓய்வூதியம் தொடர்பான சேவைகள்
- பிறப்பு, இறப்பு மற்றும் உத்தேச வயது சான்றிதழ்கள் தொடர்பான சேவைகள்
- மோட்டார் வாகன பதிவு மற்றும் வாகன வருமான அனுமதிப்பத்திரம் தொடர்பான சேவைகள்
- நகரசபை, பிரதேச சபைகளால் வழங்கப்படும் சேவைகள்
- பொலிஸ் திணைக்களத்தினால் வழங்கப்படும் சேவைகள்
- மனிதவள அபிவிருத்தி தொடர்பான சேவைகள் மற்றும் தொழில் வழிகாட்டல்கள்
- திறன் அபிவிருத்தி தொடர்பான சேவைகள் மற்றும் தொழிற்கல்வி வழிகாட்டல்கள் (NVQ)
- சமூக சேவைகள் திணைக்களத்தினால் வழங்கப்படும் சேவைகள்
- முதியோர் தேசிய செயலகத்தினால் வழங்கப்படும் சேவைகள்.
- காணி தொடர்பான சேவைகள்
- மருத்துவ முகாம் - பொது மருத்துவ பரிசோதனை, கண்புரை பரிசோதனை (Cataract), இலவச மூக்குக்கண்ணாடி வழங்குதல்



பிரதேச செயலகம், தென்மராட்சி - சாவகச்சேரி
Divisional Secretariat, Thenmaradchi - Chavakachcheri

Address : Kandy Road, Chavakachcheri.

TN/DS/EB/A/2025/Mobile

Date 2025.11.06

தலைவர்,
தென்மராட்சி அபிவிருத்திக் கழகம்.

நடமாடும் சேவையை நடாத்துவதற்கான உதவிகள் வழங்கியமைக்கான நன்றிக்கடிதம்

[illegible]

பிரதேச செயலாளர்,
பிரதேச செயலகம்,
தென்மராட்சி.

Divisional Secretary,
Divisional Secretariat,
Thenmaradchi,Chavakachcheri

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தால் நடத்தப்பட்ட நடமாடும் சேவைக்கான செலவின் ஒரு பகுதி தனியார் தரப்பிடமிருந்து அறவிடப்பட்டு செலுத்தப்பட்டுள்ளது என்பது தற்போது தெரியவந்துள்ளது.

சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் கடந்த 2025-11-04 அன்று ஒரு நடமாடும் சேவையை மாவட்டச் செயலகம் நடத்தியுள்ளது. இந்த நடமாடும் சேவையின்போது ஒரு லட்சத்து 83 ஆயிரத்து 970 ரூபா செலவு ஏற்பட்டுள்ளது.

அந்தச் செலவிற்கான பணத்தை தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்திடம் இருந்து பெற்றுக்கொண்டு அப் பணத்தை பெற்றுக்கொண்டதற்கான கடிதத்தை பிரதேச செயலாளர் அலுவலக கடித தலைப்பில் உத்தியோக பூர்வமாக வழங்கி வைத்துள்ளார்.